திராவிடநாடு

மலர் 14 | விலை 2 அணா | இதழ் 22

ரஷ்யத் தலைவர்களுக்குச் சென்னைமா நகரமும், கோவையும்
'தமிழில்' வரவேற்பளித்து பெருமிதமாக வாழ்த்தியது.

16-ம் பக்கத் தொடர்ச்சி

படி அவள் கொஞ்சு மொழியில் கெஞ்சினளோ, என்னென்ன பானங்களோ, எவ்விதமான பளிங்குக் கிண்ணங்களோ........எப்படி எப்படி இன்பம் கண்டனரோ...... என்று இவ்வகையில் எண்ணம் நெளியத்தக்கவகையான காட்சிகள்தான் தெரிந்திருக்கும்.

ரஷியத் தலைவர்களின் கண்களுக்கோ உழைத்து அலுத்த மக்கள், உப்பரிகையில் உலவிக் கொண்டு உத்தரவு பிறப்பித்த பாதுஷாக்கள் — இந்தக் காட்சிதான் தெரிந்தது.

குருஷேவ், இதனைக் கூறியும் விட்டார்!

வல்லரசுகளை நடத்திக்கொண்டு, வஞ்சகத்தைப் புன்னகையாலும் பூச்சாலும் மறைத்திடுவோருக்கு, இது பண்பு குறைந்த பேச்சாகத் தென்படும்.

குருஷேவ், மக்களின் சார்பில் தான் பேசவேண்டும், அது மாளிகையின் இலக்கணமல்ல எனினும் பரவாயில்லை!—என்று துணிந்து கூறினார்.

பெரம்பூரில் கட்டப்பட்டுள்ள தொழிற்சாலையில், குருஷேவ், மக்களின் தலைவன், எதைக் கண்டறியவேண்டும், கண்டறிந்ததை எங்ஙனம் கூறிடல்வேண்டும், என்பதை விளக்கிய முறையில் பேசிய பான்மை ஆச்சரியகரமானது.

உமது முயற்சி பாராட்டத் தக்கது என்று கூறுவதற்கு அனுமதி அளிக்கும்படி தங்களை வேண்டிக் கேட்டுக்கொள்வதற்குத் தாங்கள் மனமுவந்து சம்மதமளிப்பீர்கள் என்ற நம்பிக்கையுடன் நான் கூற விரும்புகிறேன்—என்று இவ்வண்ணம் சொல்லரண்கட்டி, கருத்தை மறைத்திடும் போக்கிலே தான் பிறநாட்டுத் தலைவர்கள் பேசுவர், பூசுவர்! குருஷெவ், அவ்விதமல்ல; "எம்பொருட்டு இந்தத் தொழிற்சாலையை அமைத்திருப்பதாகக் கூறுகிறார்கள் — குருஷெவ் அவர்களே! தயவுசெய்து அதனைப் பார்வையிட்டு, அதிலே குற்றம் குறையிருப்பின் எடுத்துக்கூறுக!" என்று மக்கள் கேட்டுக்கொண்டு, அனுப்பி வைத்திருப்பதுபோலவே, குருஷெவ், பெரம்பூர் தொழிற்சாலையைப் பார்த்துவிட்டு, சிறிதளவு கோபமாகவே,

செச்சே! ஏன் இப்படி கட்டிட வேலைக்கு இவ்வளவு எஃகு உபயோகித்தீர்கள்-

இது வீண் நஷ்டம்! பாழ்படுத்திவிட்டீர்கள்.

இங்கு உபயோகித்திருக்கும் எஃகிலே முக்கால் வாசியை மிச்சப்படுத்தி இருக்கலாம்.

சிமிட்டியில் கட்டியிருக்கலாம்.

எஃகு பாழகக்கப்பட்டுவிட்டது.

என்று கண்டித்துவிட்டார். தொழிற்சாலை அதிகாரிகள், சமாதானம்கூற, சமர்த்துடன் முயற்சித்தனர். குருஷெவ் சம்மட்டி அடி கொடுப்பதுபோல,

என்மீது கோபித்துக் கொள்ளவேண்டாம்.

உங்கள் நன்மைக்காகத் தான் சொல்கிறேன்.

இதுபோல, என் நாட்டிலேயும் சொல்லுகிறேன்.

எமது நாட்டில் இவ்விதம் எஃகு பாழாக்கப்படுவதில்லை

வந்து பாருங்கள், எமது நாட்டினை என்று கூறினார்.

எவ்வளவு பிரம்மாண்டமான கட்டிடம்!

எத்துணை உற்சாகத்துடன் வேலை நடக்கிறது.

எல்லாம் என் ஆட்சியில், என் திட்டப்படி! — என்ற முறையில் தான் நேரு பண்டிதரே பெரம்பூர் தொழிற்சாலையைப் பார்த்தார், பூரித்துப்போனார், பாராட்டுரை வழங்கினார்; இங்கு எஃகு இவ்வளவு பாழாக்கப்படுகிறது என்பதை அவர் கண்டறியவுமில்லை, அவருடைய கருத்து அவ்வழி செல்லவுமில்லை.

நேருபண்டிதரும், பிறநாடுகளிலே காணப்படும் பெருந்தலைவர்கள் போலவே, நாட்டிலே அணை வேண்டும், தேக்கம்வேண்டும், தொழிற்சாலைகள் வேண்டும் என்பதுபற்றியும், தம் ஆட்சியிலே இத்தகைய 'வெற்றிகள்' உருவெடுக்க வேண்டும் என்பது குறித்தும்தான் எண்ணுகிறாரே தவிர, இவைகள் மக்கள் சார்பிலே நடத்தப்படுகின்றனவா, மக்களின்பொருள் பாழாக்கப்படாமலிருக்கிறதா, என்பது பற்றிய அக்கரையைச் செலுத்தக் காணோம். அவருக்கு மலைகளெல்லாம் மலர்த்தோட்டங்களாகவேண்டும் என்ற ஆசை இருக்கிறதே தவிர, மந்திகள் அங்கு நுழைந்து பாழாக்காவண்ணம் அரண் அமைக்க வேண்டுமே என்பது பற்றிய, எண்ணம் எழுவதில்லை.

"என் திறமையை மாமன்னா! கூறிடப் பெருமைப்படுகிறேன் கேட்டிடின் தாங்களே பூரிப்படைவீர்கள்" என்றான் மல்லன்.

மாமன்னன், "கூறு, கேட்டிடுவோம், வீரச் செயல் யாது செய்தனை?" என்றான்.

"ஒரே அறை—கன்னத்தில், காவலா! ஒரே ஒரு அறை தான், அதுவும் இலேசாகத் தான்—பற்கள் முப்பத்திரண்டும் பொலபொலவெனக் கீழே உதிர்ந்தன" என்றான் மல்லன்.

"பளா! பளா! ஒரே அறையில், 32 பற்களும் உதிர்ந்தனவா? அருமை! அருமை! அமைச்சரே! மல்லன் செய்தது கேட்டீரோ? தங்கத் தோடா, முத்து மாலை பரிசு அளித்தோம்" என்றான் மாமன்னன்.

அமைச்சர் குறுக்கிட்டு, "அரசர்க்கரசே! மல்லன் திறம் கண்டு மகிழ்வது சரியே; பரிசுக்கு உரியவன் எனத் தாங்கள் உரைத்ததும் மன்னர்க்கழகுதான்; ஆனால், ஒரே அறையினால் எல்லாப் பற்களையும் இழந்தவன் யார் தெரியுமா?" என்று கேட்டான்.

மாமன்னன், "ஆமாம், ஆமாம், அதை மறந்தேன். யார் அவன்?" என்றான்.

மல்லன் திகைத்தான்.

அமைச்சன் கூறினான், "மன்னவா! மல்லன், தன் மதிமிக்க மகனுடைய பற்களைத் தான் அங்ஙனம் உதிரச் செய்தான். அவன் குற்றம் ஏதும் செய்யாதவன். குடித்துப் புரளும் தந்தையைக் கண்டித்தான்—கோபத்தால் மல்லன் இக்கொடுஞ்செயல் புரிந்தான். இதற்கோ பரிசு" என்று கேட்டான். மன்னன் வெட்கித் தலைகுனிந்து, மல்லனைத் தண்டித்தான்.

கதைதான்! ஆனால் கடைசியில் தண்டனை கிடைக்கிறது, தகாத

(4-ம் பக்கம் பார்க்க)

ஆண்டுச் சந்தா ரூ. 7

திராவிடநாடு

மலர் 14] 4-12-55 [இதழ் 22

போக்குவரத்து

பரமேஸ்வரனைப் படாதபாடுபடுத்துகிறார்கள், பத்திரிகைக்காரர்கள். ஆண்டவனையல்ல நாம் குறிப்பிடுவது அமைச்சரைத்தான். அவர் பொறுப்பிலிருக்கும் பஸ் போக்குவரத்துகுறித்து, சட்டசபையில் உறுப்பினர்கள் பலர் சரமாரியான கண்டனங்களைத் தெரிவித்திருக்கிறார்கள். இலஞ்ச ஊழல் நடைபெறுகிறதாமே—'விசில்' சப்தம் துளைக்கிறதே காதுகளை — போகிற வேகம் சகிக்கவில்லையே — குறித்த நேரத்துக்கு எங்கே வருகிறது பஸ் —மட்டு மரியாதை காட்டுகிறார்களா மக்களிடம் — பொதுப் பணம் விரையமாவதுதான் மிச்சம்—சரியான பாதுகாப்பு கிடையாது பஸ்களுக்கு—என்றெல்லாம் எழும்பிய கண்டனங்களை வைத்து, 'பஸ் போக்குவரத்தே இந்த இலட்சணத்திலிருந்தால், எல்லாத் துறையையும் தேசீய மயமாக்கினால் என்ன கதி நேருமோ?' என்று தீட்டித் தள்ளியிருக்கின்றன, ஏடுகள்.

சகல தொழில்களையும் சர்க்காரே ஏற்று நடத்தவேண்டுமெனக் கூறும் நம்போன்றாருக்கு, ஏடுகளின் சங்கநாதத்தைக் கேட்கும்போது, எரிச்சல் வரவே செய்கிறது. எனினும், அவைகள் சாட்டும் குற்றச்சாட்டுகளை மறுக்க வக்குமில்லை! வழியும் கிடையாது!! கோலமயிலைக்கொண்டுபோய்க் குருடனிடம் கொடுத்தால், அதனருமை தெரிந்து வளர்ப்பான் என்று எதிர்பார்க்கமுடியும்? அதே கதியாயிருக்கிறது, ஆளவந்தார் வசம், ஒப்படைத்த சர்க்கார் போக்குவரத்து!! சென்னையில் மட்டும்தான் என்றெண்ணாதீர்கள்--டில்லியார் நிர்வகிக்கும் இரயில் இலாகாவும்—நிர்வாக ஊழலில், 'உனக்கு நான் மட்டமோ?' என்று தானிருக்கிறதாம். நேருபண்டிதரின் நிர்வாகத்திலுள்ளதென்பதால், மித்திரன் குழுவினர், கண்டனமாரிகளைச் சொரியவில்லை. கடந்த 25-ந் தேதி டில்லி பார்லிமெண்டிலே நடைபெற்ற விவாதத்தின்போது இரயில்வே மந்திரி லால்பகதூர் சாஸ்திரியே, திண்டாடித் திணறியிருக்கிறார். உறுப்பினர்கள் பலர், அவ்வளவு காரசாரமாகத் தாக்கியிருக்கிறார்கள்.

இரயில்வே இலாகா நிர்வாகமும்' தபால் தந்தி இலாகா நிர்வாகமும், பிரிட்டிஷ் ஆட்சியிலேயே பெயர் பெற்றவை. இரயில்கள் நிற்பதும், தண்டவாளத்தை விட்டுக் கீழே விழுவதும், 'ஆகஸ்டுத்தனம்' நடந்த போதுதான் இரயில்களுக்கு அதிகமாக ஏற்பட்டதே ஒழிய இப்போதுபோல அடிக்கடி, திண்டுக்கல்லில் கூட்ஸ் விபத்து, கொள்ளிடத்துக்கருகில் பாதையைவிட்டு இறங்கியது, விக்கிரவாண்டிக்கருகில் விபரீத சேதம் என்று செய்திகள் வந்தது கிடையாது —வெள்ளையரின் ஆட்சியில்.

ஏனிப்படி விபத்துகள்? குறித்த நேரத்தில் வருவதில்லை? — என்று கேட்டிருக்கிறார்கள், உறுப்பினர்கள். அதற்குக் காரணம் இரயில்வேக்களையெல்லாம் 'பிரதேச' வாரியாகப் பிரித்து அமைத்ததுதான் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

வெள்ளையன் காலத்திலில்லாத புதிய முறையைச் செய்யப்போவதாக எண்ணி காலம் சென்ற கோபாலசாமி அய்யங்கார், இப்படி 'பிரதேச' வாரியாகப் பிரித்தார்—இதனால், எஸ். ஐ. ஆர் என்றும் எம். எஸ். எம் என்றும் இருந்த பிரிவுகள் இணைக்கப்பட்டு 'சதர்ன் ரயில்வே' என்றொரு பேரும் வைக்கப்பட்டது. அதிகாரிகள் வசம், பெரிய பொறுப்புகள் அளிக்கப்பட்டன!

'இது ஏன்?' என்று கேட்டபோது, இப்படிச் செய்வதால் பணச் செலவு குறைவதாகவும்-ஏராளமான அதிகாரிகளுக்குப் பதில் சில அதிகாரிகளே போதுமென்றும், வேலையும் திறமையாக நடைபெறுமென்றும் தெரிவித்தார்கள்.

வேலை, திறமையாக நடைபெறவில்லையென்பதை, விபத்துச் செய்திகளே விளக்கும்! ஆனால், பணச் செலவு குறைந்திருக்கிறதா என்று பார்த்தால் அதுவும் இல்லையென்று கூறுகிறார் பாராளும் உறுப்பினர் பிராங்க் அந்தோணி. 1951ல் இருந்த முதல் தர அதிகாரிகளின் தொகை 1777 என்றால் 1954ல் உள்ள அதிகாரிகளின் தொகை 2433 ஆக உயர்ந்திருக்கிறதாம்! அதன் மூலம் செலவும் குறையவில்லை எனத் தெரிவிக்கிறார்!

பெரிய பிரதேசங்களை இணைத்து, அவைகளைக் கவனிக்க அதிகாரிகளையும் நியமிப்பதால் பலன் எதுவும் வளரவில்லை; பதிலாக "இருந்ததும் கெட்டதடா!" என்று ஆகியிருக்கிறதாம். இதனையும், ஆதாரங்களோடு, விளக்கியிருக்கிறார் அவர்,

அப்படி ஏற்பட்டதற்குள்ள காரணத்தை விளக்கும் போது, "உயர்தர அதிகாரிகளை நியமிப்பதில் பட்சபாதம் காட்டுகிறார்கள். அதனால், வேண்டியவர்களே நியமனம் செய்யப்படுகிறார்கள். திறமை, குறைகிறது;" என்று குறிப்பிட்டுள்ளார். இதே, கருத்தை இன்னும் பல உறுப்பினர்களும் வலியுறுத்தியிருக்கிறார்கள். தென் பிரதேச முதல் அதிகாரியாக இங்கே நியமிக்கப்பட்டவர் யாரென்பதை அறிந்தோருக்கு, இந்தக் குற்றச்சாட்டின் உண்மை விளங்கும்!

சர்க்கார் உடமை என்பதற்காக இரயிலானாலும் சரி, பஸ் போக்குவரத்தானாலும் சரி, இப்படி மக்கள் பணத்தைக் கொட்டி அழுது, இஷ்டம்போல் நிர்வாகம் நடத்துகிறார்களென்றால், ஆளவந்தார்களைச் சிறிதும் மன்னிக்காது, மக்கள் மன்றம். பதில் கூறித்தான் ஆகவேண்டும்.

"திறமைசாலிகளே எனக்குத் தேவை. அவர்கள், அந்நியர்களாயிருந்தாலும் சரி—இந்த விஷயத்தில் விட்டுக்கொடுக்கத் தயாராக இருக்கிறேன். தேசீய உணர்ச்சியைக்கூட இந்த விஷயத்தில் பொருட்படுத்த நான் தயாராக இல்லை" என்று ஸ்ரீ எனுமிடத்தில், நவம்பர் 25ந் தேதி பேசிய நேரு பண்டிதர் முழக்கமிட்டிருக்கிறார். அமைச்சர்களின் முன்னிலையில் அல்ல-அதிகாரிகளின் முன்னிலையில்!!

அதிகாரிகள் என்ன செய்வார்கள் பாபம்? அமைச்சர்கள் போடுகிற 'உத்தரவுகளை' நிறைவேற்றுவதுதானே அவர்கள் பொறுப்பு—மாதத்துக்கோர் அமைப்பும், இஷ்டம்போல எதுவும் செய்யும் குணமும் அமைச்சர்களிடம் நிலவும்போது என்ன செய்யமுடியும்? பணமும் கரியாகிறது! பாழாவதும் தொடருகிறது !!

★

அன்புள்ள தோழர்களே,

டில்லி நகரில் நடைபெறும் சர்வ தேசத் தொழிற் கண்காட்சியைக் காணவும், வடநாட்டில் ஏற்பட்டுள்ள நீர்பாசன, தொழில் அபிவிருத்தி திட்டங்களைக் கண்டறியவும், எனது துணைவியாருடன் காரில் செல்லுகிறேன்.

திரும்ப ஒருமாதகாலமாகலாம் என எண்ணுகிறேன். எனவே அதுவரை நிகழ்ச்சிகளுக்கு ஒத்துக்கொள்ளுமாறு பணித்துக் கடிதங்கள் எழுதாமல் இருக்குமாறு பணிவன்புடன் வேண்டிக் கேட்டுக்கொள்கிறன்.

தங்களன்புள்ள
ஈ. வெ. கி. சம்பத்.

2-பக்கத் தொடர்ச்சி

செயல் புரிந்துவிட்டு, அதனைத் தன் தீரத்துக்குச் சான்று என்று பேசிய மல்லனுக்கு...பாரதத்தின் முடிசூடா மன்னனோ ஜீப் ஊழல், உரபேர ஊழல், மாளிகை வாங்குவதில் ஊழல், என்று அடுக்கடுக்காக, தன் ஆட்சியிலே ஊழல்கள் நடந்துகொண்டிருப்பது பற்றியே அக்கரை காட்டாமல், ஒரே அறையில் 32 பற்களும் வீழ்ந்ததா! என்று வியந்திடும் நிலையில் இருக்கும்போது, பெரம்பூரில் எஃகு பாழாக்கப்படுவது பற்றியா அக்கரை காட்டுவார்! குருஷெவ் வந்து அல்லவா இதைக் கூறிக்கண்டிக்க வேண்டி இருக்கிறது.

மக்களை ஆள்வது என்பதற்கும் மக்களாட்சி நடத்துவதற்கு என்பதற்கும், உள்ள வித்தியாசம் இதிலே நன்கு தெரியத்தானே செய்கிறது.

நேருவுக்கும் குருஷெவுக்குமே மனப்போக்கிலும் கண்ணோட்டத்திலும் இந்த வகையான மாறுபாடு இருக்கிறது என்றால், தங்கத்திரைக்குப்பின்னாலே வீற்றிருக்கும் அமெரிக்கத் தலைவர்களுக்கும் குருஷெவ்வுக்கும் மனப்போக்கிலே உள்ள வித்யாசம், சாமான்யமானதாகவா இருக்கும்!

"என்னவென்றே எனக்குப் புரியவில்லையே! இந்த ஜனங்கள் ஏன் இப்படி இந்த ரஷியத் தலைவர்களை வரவேற்கிறார்கள். என்ன தந்தார்கள் இந்த ரஷியத் தலைவர்கள்? என்ன தர முடியும்? ஒரு இரும்புத் தொழிற்சாலை அமைத்துத்தர இசைந்திருக்கிறார்களாம்! அதற்கும் இந்தியா, 47 கோடி ரூபாய் தரவேண்டுமாம்; அமெரிக்கா இதுவரை இந்தியாவுக்குக் கொடுத்துள்ள தொகையின் அளவையும் செய்திருக்கும் உதவியின் வகையையும் ஒப்பிடும்போது, ரஷியர்கள் கொடுத்தது சுண்டைக்காய் அளவு தானே இருக்கிறது! இருந்தும், இவ்வளவு அமோகமாக வரவேற்கிறார்களே! காரணம் தெரியவில்லையே!"

லெஸ்டர் பியர்சன் என்ற கனடா நாட்டு மந்திரி இந்தக் கருத்துப்பட, நியுயார்க் நகரில், இந்தத் திங்கள் 28ந் தேதி பேசினார்.

காரணம் தெரியவில்லையாம்—எப்படித் தெரியும்? தங்கத்திரை கண்ணை மறைக்கிறது.

தங்கத்திரை, கண்ணைப் பறிக்கும் வகையில் அமைந்திருக்கிறது. அமெரிக்காவும் அதன் ஆதீனத்திலே சிக்கிக்கொண்டுள்ள நாடுகளும், அந்தத் திரையின் தகதகாயத்தைக் கண்டு சொக்கிக் கிடக்கின்றன.

பியர்சன், இந்தப் பொன்னொளி கண்டு மயங்காமல், சோவியத் தலைவர்களிடம் ஏன் சொக்கிப்போகிறார்கள் இந்த மக்கள் என்று கேட்கிறார்.

இரும்புப் பெட்டியைத் திறந்து காட்டுகிறது அமெரிக்கா! இதயத்தைத் திறந்து காட்டுகின்றனர் ரஷியத் தலைவர்கள்!!

காரணம் கேட்கிறாரே, பியர்சன், காரணம் இதுதான். ஆனால் அதை அவர்போன்றோர் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் — ஏனெனில் அவர்கள் இன்னமும் இரும்புப் பெட்டியிடம் அச்சத்தால் ஆசை கொள்பவர்களாக உள்ளனர்; அது மட்டுமா, நேரு பண்டிதரும் இரும்புப் பெட்டிக்காரரின் தோழமையை இழக்க விரும்பாத ஆட்சிமுறை நடத்துபவர்தானே என்ற எண்ணம் வேறு, பியர்சன் போன்றோரின் உள்ளத்தைக் குடைகிறது.

இரும்புப் பெட்டிக்கும் இதயத்துக்கும்உள்ள வேறுபாடும், முரண்பாடும், கூறிட ஆசை எழுகிறது, ஆனால், தம்பி! அடிகள் கோபிக்கிறார், இடம் இல்லை என்று, எனவே அடுத்த வாரம் பார்ப்போம்.

அன்பன்,

அண்ணாதுரை.

11-ம் பக்கத் தொடர்ச்சி

தன்னிச்சைக்குகந்த வருங்காலத்தைப்பற்றி கனவு காண்கிறாரோ? அல்லது தாம் விரும்புகிற போராட்டங்களையும், வெற்றிகளையும் காண்கிறாரோ?

நேரு பாஸிஸ்டு ஆகமுடியாது. ஆனால், அவரை சர்வாதிகாரியாக்குவதற்கான சகல சந்தர்ப்பங்களும் சௌகரியங்களும் இருக்கின்றன.

பெரும் புகழ், சரியான நோக்கத்தின்பால் திரும்பிய மன உறுதி, ஊக்கம், கர்வம், வல்லமை, ஸ்தாபன அமைப்புத் திறமை, கூட்டங்களிடத்து அன்புகொண்டாலும் கூடவே உள்ள சகிப்பின்மை, பல ஹீனத்தையும், திறமையின்மையையும் வெறுத்தல் ஆகிய குணங்கள் அவரிடம் இருக்கின்றன.

அவர் முன்கோபி. கோபத்தை அடக்கிக்கொண்டால்கூட துடிக்கும் உதடுகள் கோபத்தை வெளிக்காட்டிவிடும். காரியங்களை உடனே சாதித்து முடிக்கவேண்டுமென்ற அளவுகடந்த ஆசையும், தான் வெறுப்பவைகளை உடனே அழித்து வேறு புதிதாக நிர்மாணிக்கவேண்டுமென்ற அவாவும் மெதுவாக நகர்ந்து செல்லும் ஜனநாயக அமைப்பை சகித்துக்கொண்டிரா. ஆனால், அது தன்னிச்சைப்படி நடக்கும்படி வளைத்துவிடக் கூடியவர் நேரு.

அதில்தான் நேருவுக்கும் இந்தியாவுக்கும் ஆபத்திருக்கிறது. நன்மையும திறமையும் மிகுந்த சர்வாதிகாரத்தனத்தினால் இந்தியா சிறிது செழித்தாலும் ஓங்கி வளராது......

நாம் ஒருமனிதனை உயர்த்தி விடுகிறோம். சர்வாதிகாரி என்று மக்கள் நினைக்கும்படிச் செய்துவிடுகிறோம். நேருவிடம் உள்ள தவறான குணங்களுக்கு தூபம் போட்டுவிடுகிறோம். அவருடைய வீண் பெருமையையும், அகங்காரத்தையும் அதிகப்படுத்துகிறோம். நாம்தான் இந்தியாவின் சுமையைத் தாங்கமுடியும் அல்லது இந்திய பிரச்னைகளை தீர்க்கமுடியும் என்ற நம்பிக்கை அவருக்கு ஏற்படும்படி நடந்து கொள்கிறோம். பதவி மோகம் கிடையாது என்று வெளியில் காட்டிக் கொண்டாலும் பல முக்கிய பதவிகளை வகித்துள்ளார் என்பதை நாம் மறந்து விடலாகாது. நம்மாலே தான் எல்லாம். இல்லாவிட்டால் ஒன்றும் நடக்காதென்று அவர் நினைத்துக் கொள்ளலாம். எந்த மனிதனும் இம்மாதிரி நினைக்கும்படி விடக்கூடாது.

வருங்காலத்தில் அவரிடமிருந்து நல்ல வேலையை எதிர்பார்க்க நமக்கு உரிமை உண்டு. ஆனால் அவரை அனுவசியமாகப் போற்றிப் புகழ்வதன்மூலம் அதைக் கெடுத்துவிடவேண்டாம். அவருடைய வீண் பெருமையோ இப்போதே போதும், போதுமென்ற அளவுக்கு இருக்கிறது. அதைத் தடுக்கவேண்டும். நமக்கு சர்வாதிகாரிகள் தேவை இல்லை.

[பல ஆண்டுகளுக்கு முன் பண்டிதநேருவே தம்மைப் பற்றி 'சாணக்கியன்' என்ற புனை பெயரில் எழுதிய குண விளக்க கட்டுரை இது.]

★

வெட்கப்படவேண்டிய செயல்

முடியாது என்று கூறிவிட்டார்களாம்.

'சோடா ஆஷ்' தொழிற்சாலை அமைக்க இயலாது என்று சொல்லி விட்டார்களாம்.

"எங்களிடம் வசதி இல்லை! அதற்கான பயிற்சியும் இல்லை/! ஆகவே, வேண்டாம்" என்று தெரிவித்து விட்டார்களாம்.

*

தென்னாட்டிலே, திருநெல்வேலிச் சீமையிலே அமைய விருக்கும் பெரிய தோர் ஆலைத் தொழிலுக்கு வடநாட்டாருக்கு அனுமதியளித்ததேன்? என்று சட்டசபையிலே தோழர் பாலகிருஷ்ணன் கேட்டபோது மேற்கண்ட பதிலை அளித்திருக்கிறார் அமைச்சர் சுப்ரமணியம்.

தென்னாட்டிலுள்ளோர், இயலாது என்று தெரிவித்ததன் காரணமாக, வடநாட்டாருக்கு 'அனுமதி' பெற்றுத் தரப்பட்டதாம்! யார்யாரை, இவர்கள் கேட்டார்கள்—மறுத்த பிரபுக்கள் யார் எனும் விபரம் கூடத் தேவையில்லை, நமக்கு. வடநாட்டுக்காரர்கள், தேயும் தென்னாட்டைத் தமக்கோர் 'மார்க்கெட்' டாகவும், வளமுள்ள காடாகவும் கருதிக் கொண்டிருப்பதை அறியார் இரார். டாடா, டால்மியா, பிர்லா, பஜாஜ் போன்ற பெரும் பணக்காரர்களின் சுரண்டலுக்குப் பயன் பட்டு வருகிறது, தென்னாடு. இதனை, பல்லாண்டுகளாக எடுத்துரைத்து வருகிறோம். இருந்தும், இப்போது இன்னொரு கம்பெனி—அதுவும் வடவரின் ஆதிக்கத்தில்!!

"அது சரியா? ஏன் தென்னாட்டில் ஒருவருமில்லையா, அந்தத் தொழிற்சாலையை நடத்த!" என்று கேட்டதற்கு, இந்தப் பதிலை அளித்திருக்கிறார், அமைச்சர். யாருமே முன்வரவில்லை—தென்னாட்டிலுள்ள எந்த முதலாளியும் முதல்போட ஆசைப்படவில்லை—தொழிற்சாலை கட்டாமல் நின்றுபோய்விடுமோ எனும் கவலை வருகிறது என்றால், அதற்கு வடநாட்டுக் கம்பெனியை அழைத்து, அதற்கு இடம் ஏற்படுத்தித் தருவது ஒன்றைத்தவிர வேறொரு வழியுமில்லாததுபோலப் பதில் தந்துள்ளார், சுப்ரமணியம்.

சோடா ஆஷ், தொழிற்சாலை; அதனால் பல துணைத் தொழில்கள் மலர முடியும்—சில ஆயிரம் பேருக்கு வேலை கிடைக்க முடியும்—அப்படிப்பட்ட தொழிற்சாலையை நிர்வகிக்க, முதலாளிகள் வரவில்லையென்றால், கன்னத்தில் கைவைக்க வேண்டியதும் 'கள்ளனை' அழைத்து வந்து கொள்ளையிட்டுக் கொண்டுபோ, என்று சொல்லுவதும் தவிர, வேறு வழிகளே இல்லையா? அமைச்சர், அதே கருத்தில்தான் அளிக்கிறார் பதில்.

"முதலாளிகள் முன் வரவில்லையென்றால். மிகவும் நல்லது. ஏ முதலாளிகளே! எங்களைப் பிறகு குறை சொல்லாதீர்கள். எல்லாத் தொழில்களையும் சர்க்காரே ஏற்று நடத்த முன்வருகிறதென்று குற்றம் சுமத்தாதீர்கள். உங்களை அழைத்தோம், நீங்கள் வரவில்லை. ஆகவே, நாங்களே அந்தத் தொழிற்சாலையை நடத்துகிறோம்" என்று வெகு சுலபமாகச் சொல்லிவிட்டு, சர்க்காரே அத்தொழிலாலையை மேற்கொண்டிருக்கலாமே. மாநிலத்தை ஆளும் சர்க்காருக்கு, ஒரு ஆலையையா நிர்வகிக்கமுடியாது? ஒரு கமிட்டியை அமைத்து – சில நிபுணர்களை வைத்து—ஆலையின் நிர்வாகத்தை ஒப்படைத்து, தம்முடைய மேற்பார்வையிலேயே ஏன் வைத்திருக்கக்கூடாது?

ஆலையை அமைக்கப் பணம் வேண்டாமோ? – என்று சொல்லக் கூடும். ஆனால், இப்போதுமட்டும் சர்க்கார் பணம் தராமலா இருக்கிறது, அந்த வடநாட்டு 'முதலை'க்கு!

ரூபாய் பத்துலட்சம் கொடுத்திருக்கிறார்கள்—அதிலே, பங்குதாரராகவும் சேர்ந்திருக்கிறார்கள். இந்தப் பத்துலட்சமும் தந்து, ஆலை, வடவரின் வசமா, வாழவேண்டும்? யார் வீட்டுப் பணம், இந்தப் பத்துலட்சம்? தென்னாட்டாருக்கு இந்த உதவியை அளிப்பதாக, சர்க்கார் கூறியதுண்டா?

"பத்துலட்சம் போதுமோ, ஆலை கட்ட? கோடிக்கணக்கில் பணம் தேவைப்படுமே!" எனச் சொல்லக் கூடும், காமராஜ் சர்க்கார்.

இந்திய தொழில் நிதி உதவிக் கார்ப்பரேஷன் எங்கே போயிற்று? அதைக் கடன் கேட்கிறது, அதுவும் இல்லையென்றால், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே இதுவும் ஒன்று என்று சொல்லுவது. அதுவும், இல்லையென்றால், மக்கள் மன்றத்தில் கடன் எழுப்புவது. இதுவரை, எத்தனையெத்தனை காரியங்களுக்குக் கடன் கேட்டிருக்கிறார்கள்—இதோ, பத்துக்கோடி சேர்ந்தது, முன்பு இருபது கோடி சேர்ந்தது என்று பெருமையடித்துக்கொள்ளுகிறார்கள். ஒரு ஆலை அமைக்க, கடன் தேவை என்று கேட்டால் என்ன!

ஏதோ எந்த வழியும் இல்லாத காரணத்தால் — இந்தச் சந்தர்ப்பத்தைவிட்டால் தொழிற்சாலை அமையாது போய்விடும் என்கிற துடிப்போடு — வடநாட்டுக்காரரின் 'காலடி'யில் விழ நேர்ந்ததுபோலப் பதில் சொல்கிறது, காமராஜர் சர்க்கார். வெட்கம், என்போம், இதனை! தென்னாட்டின் மானம் குலைக்கும் செயல் என்போம் — டால்மியாக்களும், பிர்லாக்களும் வாழ, இவர்கள் எல்லாம் 'வசதி' யளிப்பதோடு, புதிய புதிய வடநாட்டுத் திமிங்கிலங்களையும் இறக்குமதிசெய்கிறார்கள். நெல்லையிலே, 'கொள்ளைக்காரருக்கு' இடம், அதை அனுமதிப்பது சென்னை சர்க்கார்! வெட்கம், வெட்கம். ★

★ சிறந்த கட்டுரைகள்
★ அரிய கதைகள்
★ வரலாற்று ஓவியங்கள்
ஆகியவைகளோடு
எண்ணம் களிக்க!
வண்ணம் மிளிர!!
சிறந்த முறையில் ★ சிந்தனை விருந்தாக
'திராவிட நாடு'
பொங்கல் மலர்
உருவாகிறது.

"வீட்டுக்கு அனுப்புங்கள்!"

புல் கூட, புத்தி போதித்திருக்கிறது! மக்கள் மன்றத்தை, எள்ளி நகையாடிய எத்தர்களுக்கு, கேவலம் புல் கூடப் புத்திபோதித்திருக்கிறது.

நித்யானந்தம் அனுபவிப்போர் நாம், நீட்டியவிரல்பக்கம்பாயப்படையுண்டு பக்கத்தில், மன்னனிருக்கிறான் பக்கபலமாக, இவர்கள் என்ன செய்துவிடமுடியும்?—என்று மமதையுடனிருந்த பிரெஞ்சுப் பிரபுக்களுக்கு, சாதாரண புல் கூடப் புத்தி போதித்திருக்கிறது.

"பாராளும், மகிபா! பசி...பசி..." என்று பஞ்சைகள் பதறியோடிக் கெஞ்சியபோது — அறுசுவையுணவை, ஆரணங்கு எடுத்துத்தர, அதனைச் சிரமமின்றி உண்ணும்படி பக்குவம் செய்தானா எடுபிடி என்று கேட்டபடி அருந்திவிட்டு வந்த பிரபு, "அப்படியா? பசியா! பசிக்கிறதா? சோறு இல்லையா! இல்லாவிட்டால் என்ன? இலை, தழை, பல், பூண்டு இல்லையா போய்த் தின்னுங்களேன்" என்று கூறினானாம், புரட்சி பூப்பதற்கு முன்பு பிரான்சு நாட்டில். பிரபுக்களுக்குத் தைரியம், நாடே அடிபணியும் மன்னனிருக்கிறான், அவனுக்குச்சகா, நாம்—என்பதால்.

ஆனால் மக்கள், பிரபுக் குலம் எந்த மன்னனைச் சதமென்று நினைத்திருந்ததோ, அதே மன்னனுடைய நடவடிக்கைகளையே கண்டிக்கவேண்டிய நேரம் உண்டாயிற்று —"மன்னன் கட்டளையிடுகிறேன்" என்றால், "மன்னன் கட்டளையிட்டால் என்ன, அவனும் மனிதன் தானே" என்று கேட்குமளவுக்குச் சென்றனர். பசி, அவர்களை எரிமலையாக்கிற்று! அதனை அரசனும் அவனைச் சார்ந்தோரும், ஏளனமாக எண்ண எண்ண, புரட்சி மலர்ந்தது.

புல்லைத் தின்னச் சொன்ன பிரபு யார்? — பிடித்துவா, அவனை —இதோ—பலிபீடத்தில், வையடா தலையை—இதோ, பார் புல், இதைக் கொஞ்சம் தின்று பாரடா பிரபுவே! — என்று, பழிவாங்குமளவுக்குச் சென்றது, மக்கள் மன்றம்.

புரட்டிய நூல்களும், கூடியிருந்த பண்டித மணிகளும் போதிக்காத உண்மையை, அந்த நேரத்தில், புல் போதித்தது—பிரபுக்களுக்கு! பிரெஞ்சு நாட்டுப் பிரபுக்களுக்கு மட்டுமல்ல, அப்படி அட்டகாசம் செய்யும் எவனும், மக்களை மதியாத எந்த மதோன்மத்தனும் அந்தக் கதிக்குத்தான் ஆளாவான் என்று உலகுக்குப் போதித்தது.

அந்தச் சம்பவத்தை எடுத்துரைக்க அங்கே யாரும் இல்லை போலும் — அதனால்தான் பாராளும் சபையிலே அமைச்சராகும் பாக்கியம் பெற்றிருக்கும் பண்டித பந்த் என்பார், உறுமும் குரலிலே உரத்துப் பேசியுள்ளார் "இப்படியெல்லாம் ஏனய்யா, எங்களைக் கேள்விகேட்கிறீர்கள்? முடிந்தால், எங்களை வீட்டுக்குப்போகச் சொல்லுங்கள். பார்க்கலாம்" என்பதாக. வீட்டுக்குப் போகச் சொல்லுங்கள் 'பார்க்கலாம்!—என்று திமிரோடு செப்பியிருக்கிறார். இதே குரல்தான், பிரெஞ்சுப் பிரபுக் குலத்திடமிருந்து ஒலித்தது! இப்போது, டில்லி பார்லிமெண்டிலிருந்து கேட்கிறோம்.

நேரு பண்டிதரின் சகா நாம் எனும் தைரியம், பந்துக்கு! அதனால், அழுத்தமான குரலில், அகம்பாவம் தொனிக்க, "முடிந்தால் எங்களை வீட்டுக்கு அனுப்புங்களேன், பார்க்கலாம்!" என்று பதில் தந்திருக்கிறார்.

பாராளும் சபையிலே ஒரு உறுப்பினர்—காங்கிரஸ்காரல்ல, எதிர்க்கட்சிக்காரரர்களுக்குப் பதிலளிக்கையிலேயே, இவ்வண்ணம் திமிரோடு, தெரிவித்திருக்கிறார், பண்டித பந்த்.

எங்களை வீட்டுக்குப் போகச் சொல்லுங்களேன்! அதைவிட்டுவிட்டு, ஏனிப்படிக் கேட்கிறீர்கள்—எனச் சிறுகிறார். இந்த அளவுக்குச் சீற்றம் ஏற்படும்படி, எதிர்க்கட்சி உறுப்பினர், கேட்ட கேள்வி என்ன! ஏனிப்படிப் பாய்ந்தார், பந்த்!

இரண்டொரு ஆண்டுகளுக்கு முன்பு, டில்லி சர்க்கார் வெளிநாட்டுக்கு 'ஆர்டர்' கொடுத்து ஜீப் கார்கள் வாங்கி நடத்திய வியாபாரத்தில் ஏற்பட்ட ஊழலைப்பற்றி, அந்த உறுப்பினர் கேட்டார். ஊழல் விளைந்ததே அதுபற்றி என்ன நடவடிக்கைகள் எடுத்தீர்கள், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது தக்க நடவடிக்கை எடுத்தீர்களா,—எனும் விபரங்களைக் கேட்டார், உறுப்பினர்.

இப்படியெல்லாம் கேள்வி கேட்கவும், தாங்கள் செலுத்தும் வரிப் பணத்தை அரசாங்கம் சரியாகச் செலவிடுகிறதா என்று கண்காணிக்கவுமே, மக்கள் அவரைத் தேர்ந்தெடுத்து அனுப்பியிருக்கிறார்கள். எனவே, உறுப்பினர், அக்கேள்வியைக் கேட்டார்!

உறுப்பினர்களின் கேள்விக்குத் தக்க பதில் தருவதும், அவர்கள் எல்லாம் அப்படிக் கேள்விகள் கேட்காமலிருக்குமளவுக்குப் புத்திசாலித்தனமாக அரசாங்கத்தை நடத்திச் செல்வதற்கும்தான் நல்லாட்சி என்று பெயர்.

ஆனால், பண்டித பந்துக்கு, உறுப்பினரின் கேள்வியைக் கேட்டதும், கோபமும் திமிருமே வந்திருக்கிறது. ஜீப் வியாபார மோசடி நடக்கவில்லை—என்று சொல்ல முடியாது. சர்க்காரின் கணக்குத் தணிக்கைக் கமிட்டியே, காரசாரமாகக் கண்டித்த விஷயம். லட்சக் கணக்கில், நஷ்டம்! அதுபற்றி, எடுத்துச் சொன்னதும், சீற்றம் வருகிறது, சிலருக்கு.

வீட்டுக்கு அனுப்புங்களேன்! என்கிறார். இப்படிக் கேள்விகள் கேட்பதற்குப் பதில், எங்கள் சர்க்கார் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்து எங்களைச் சர்க்கார் பீடத்திலிருந்து இறக்குங்களேன், என்கிறார்.

இப்படித்தான், பிரான்சில், பிரபுக் குலம் பேசிற்று. அதே குரல், இங்கே கிளம்புகிறது. "மகா ஜனங்களே! எங்களை ஆதரித்து வோட்டுப் போடுங்கள். வறுமைக்கு வைக்கும் வேட்டு அது; நாட்டுக்கான நன்மைகளைச் செய்வோம். மாட்டுப் பெட்டியே உங்களுக்கு மகேசன் மாதிரி" என்றெல்லாம் வாக்குறுதி கொடுக்கும் கட்சியைச் சேர்ந்தவர் தான் பந்த். ஆனால், இப்போது, 'மெஜாரிடி' இருக்கிறது எனும் தைரியமிருப்பதால், இவ்வளவு திமிருடன் பேசுகிறார்.

வீட்டுக்கு அனுப்புங்களேன்!—பொறுப்புள்ளவர்களிடமிருந்து இந்தப் பதிலை யாரும் எதிர்பார்க்கமாட்டார்கள். ஆனால், தேசியத்தார்களிடமிருந்துதான், இதுபோலெல்லாம் கேட்கமுடிகிறது.

நேரு இருக்கிறார்! — சர்வரோக நிவாரணி அவர்—எந்த ஊழலுக்கும் அவர் பெயரைச் சொல்லி அவருக்கேற்பட்டிருக்கும் 'மகிமை'யைக் காட்டி மக்களை மயக்கிடமுடியும்—'மெஜாரிடி'யைப் பெற்றுவிட முடியும் எனும் தைரியம் அதிகமாகி வருகிறது, டில்லிக்கூடாரத்தினருக்கு.

நேருவுக்கு, அவ்வளவு 'சக்தி' வளர்ந்திருப்பது, உண்மைதான். ஆனால் அதைவிட அதிகமான சக்தி'தானிருந்தது, பிரெஞ்சு மன்னனுக்கு! ஆனால், அட்டூழியம் பொறுக்க முடியாதபோது, 'மன்னன்தானே?' என்று மக்கள் விட்டுவிடவில்லை. 'மன்னனாயிருந்தாலென்ன!' என்றுதான் கேட்டது, மக்கள் மன்றம்.

அதைக் கவனமூட்டுகிறோம், பந்த் கூட்டத்தாருக்கு.

வீட்டுக்கு அனுப்பாமலில்லை, மக்கள்! கடந்த தேர்தலில், எத்தனையோ அமைச்சர்களை வீட்டுக்கு அனுப்பத்தான் செய்தார்கள், மக்கள்—அதனைப் பந்த் மறந்துவிட்டார் போலும், மமதையின் காரணமாக,

அக்கிரமமும் அதிகாரத் திமிரும் என்றும் நீடித்ததில்லை — அதனை உணர்த்த, வரலாற்றிலுள்ள, நிகழ்ச்சிகள் பல. அதிகாரமேந்திகளுடைய செல்வாக்கையும் புகழையும் கண்டு அஞ்சி மிரண்டோர்தான் கனல்கக்கும் கண்களுடனே "பாதகா! புல்லையா தின்னச்சொன்னாய், எங்களை. இதோ, புல்! நீ தின்று பார்!" என்றார்கள், அங்கே.

அதைக் கவனமூட்டுகிறோம் அன்பரின் கட்சியினருக்கு. அதிகார வாழ்வு, சதமல்ல! அமைச்சர் பதவியும் நிரந்தரமல்ல!

★

★ அந்த நற்பண்பு ★

எதிர்க்கட்சி என்றாலே எரிச்சலோடு பார்ப்பதென்பதே, காங்கிரஸ் இயக்கத்தின் கொள்கையாகும். அதிலும், கழகம் என்றால் அதாவது திராவிட இயக்கமென்றாலே அவர்கள் காட்டிவரும் ஆத்திரமும் அதிருப்தியும் ஏராளம். திராவிட கழகத் தலைவர் பெரியார் அவர்களைப்பற்றி காங்கிரசார் வீசாத வார்த்தைகளில்லை! என்னென்ன சொல்லி ஏசவேண்டுமோ, அவ்வளவும் செய்திருக்கிறார்கள்!

அவருடைய இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்பதற்காக 'அறுப்போம், நாக்கை' 'வெட்டுவோம் கட்டை விரலை' என்றெல்லாம்கூட முழக்கமிட்டவர்கள் இருக்கிறார்கள். அந்த ஆத்திரத்தின் விளைவாகத்தான் "தேனி" கலவரமும், உடையார்பாளையம் வேலாயுதம் —மஜீது—பாண்டியன் ஆகியோரது படுகொலைகளும்கூட நடைபெற்றன.

இந்தப் பரிதாப சம்பவங்களைக் கண்டபோது, மிகவும் வருந்தினோம். அரசியலில், அநாகரீகம் நுழைகிறதே என்று அஞ்சினோம்.

கருத்து வேற்றுமைகள் இருக்கக் கூடும்! அதற்காக 'கத்தி'தேடுதலும், 'முண்டா' தட்டுதலும், ஏற்படுவதென்பது மிகமிக வெட்கப்படவேண்டிய செயல். மாற்றுக் கட்சியினர் மாறான கொள்கைகள் கொண்டவர்கள் என்பதற்காக, அவர்களைக் கண்டதும் சீறுவதும், ஜென்ம விரோதிகளைப்போலப் பாய்வதும் அருவருக்கத்தக்க காரியம். அதனாலேயே, அடிக்கடி நாம் சொல்லி வருவதுண்டு—மாற்றான் தோட்டத்து மல்லிகை என்பதால், அதற்கு மணமிருக்காது என்று சொல்லுபவர்களல்ல, நாங்கள்—என்பதாக.

முதுபெரும் தலைவர் டாக்டர் வரதராஜுலு அவர்களின் பிறந்தநாள் விழாவிலே பேசிய காமராஜர், அந்த நற்பண்பினை வெளிக்காட்டிக் கொண்டிருக்கிறார். எப்போதுமே, இந்தப் பண்பு இருந்ததாம் அவரிடம்! இப்போது அதனை எடுத்துச் சொல்கிறார்!

காங்கிரசுக்கும் கழகத்துக்குமிடையே ஒன்று சேர முடியாத அளவுக்கு விரிந்த் பரந்த வேற்றுமைகள் உண்டு.

அதற்காக எனக்கு பெரியார் அவர்களிடம் உள்ள அன்பு என்றும் மாறாது.

இவ்வண்ணம், தெரிவித்திருக்கிறார். இந்த நற்பண்பு காண மகிழ்கிறோம்—மாற்றுக் கூடாரத்திலிருப்போர் ஒவ்வொருவரும் அவசியம் கடைப்பிடிக்க வேண்டிய நற்பண்பாகும், இது. துரோகி! நாஸ்திகன்! பதவி தேடி! வெள்ளைக்காரனின் பாதம் தாங்கி! சர்க்காரின் கைப்பொம்மை!—என்று ஏசியும் பேசியும், காங்கிரசார் ஆர்ப்பரித்தபோது இதுபோலவெல்லாம் காமராஜர் அறிவிக்கவில்லை. என்றாலும், எப்போதும் என்னிடம் இருந்தே வருவது இந்த நற்பண்பு என்கிறார், அவர். அதற்காக மகிழ்கிறோம்! வளர வேண்டுமெனவும் விரும்புகிறோம்!

★

சந்தாதாரர்களுக்கு

ஒவ்வொருவரின் முகவரியின் கிழேயும் சந்தா முடியும் தேதி குறிப்பிடப்பட்டிருக்கிறது. அத்தேதிக்கு ஒரு வாரம் முன்னதாகவே, பணம் அனுப்பி சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளுங்கள்

முகவரியை மாற்றும்படி எழுதுபவர்கள், சந்தா எண்ணையும், பழைய முகவரியையும் குறிக்கவும்.

நிர்வாகி

ஒளி ஏற்பட!

ஒருநாள் சாக்ரடிஸ் பல கிராமப் பள்ளிகளுக்குச் சென்று, "சிறு பெண்கள் எங்கே?" என்று ஆசிரியர்களிடம் வினவினார்.

"பெண்பிள்ளைகள் இக்கிராமத்தில் பாடசாலைக்கு வருவதில்லை" என்று பலவிடங்களில் சொன்னார்கள். பிறகு ஒரு கிராமத்திற்குச் சென்று, "இக்கிராமத்தில் பெண் குழந்தைகளே இல்லையா?" என்று கேட்டார்.

அதைக் கேட்டு நகைத்த கிராம அதிகாரி, "பெரியாரே! இங்குதான் பெண் குழந்தைகள் அதிகம். இவர்களால்தான் பெற்றோர்களுக்கு அதிகமான செலவுகள். அதோ அங்கு சிலர் விளையாடிக் கொண்டிருக்கிறார்கள், பாருங்கள்" என்று சுட்டிக்காட்டினார். பள்ளிக்கூடத்துக்கு வந்த காரணத்தால் சற்றுச் சுத்தமாயிருந்த சிறுவர்களையும், வராத காரணத்தால் அலங்கோலமாய் விளையாடிக் கொண்டிருந்த சிறுமிகளையும் பெரியார் கண்டு வருந்தினார்.

"ஐயா! இப்பெண் குழந்தைகள் தாய்மார்களாகும் போது, அவர்கள் சொந்தக் குழந்தைகளை நன்றாக வளர்க்கவேண்டிய பெரும் பொறுப்பு அவர்களுடையது அல்லவா?" என்று சாக்ரடீஸ் வினவியதும்,

"ஈசன் சித்தமானால் எல்லாம்நன்றாய் நடக்கும். இந்தச் சிறுமிகளின் பின் சந்ததியாரைப்பற்றி நீர் ஏன் வீண் கவலை கொள்கிறீர்?" என்று கேட்டார் கிராமத் தலைவர்.

"சிறுவர்களைவிடச் சிறுமிகளைப் பற்றியே நான் அதிகம் கவலைப் படுகிறேன். ஆண்பிள்ளைகள் கற்ற கல்வி பின்பு வெளிவேலையில் முடிந்துவிடும். ஆனால் பெண்கள் கல்வி கற்றாலோ அதனைத் தங்கள் பிள்ளைகளுக்குக் கற்பித்து அநுகூலப்படச் செய்வார்கள். ஆகவே அதுமிகமுக்கியமல்லவா?" என்றார் சாக்ரடிஸ். "அதுவும்யோசிக்கப்பட வேண்டிய விஷயம் தான்" என்று கூறிய பின்பு சாக்ரடிஸிடம் விடை பெற்றுக் கொண்டு வேகமாய்ச் சென்றார் கிராம அதிகாரி.

பின்பு சாக்ரடிஸ் அருகிலிருந்த ஒரு கிராமப்பாடசாலைக்குச் சென்று, அங்கிருந்த மாணவர்களை நோக்கி, "அருமைத்தம்பிகளே! உங்கள் சகோதரிகள் ஏன் இங்கு வரவில்லை?" என்று கேட்டார். பெரியாரின் வினாவைக் கேட்டு வியப்படைந்து, மாணவர்கள் வாளா இருந்தனர்.

சாக்ரடிஸ், ஆசிரியரின் அனுமதி பெற்று, பிள்ளைகளுக்கு ஒரு கதை கூறினார்.

"வெகு காலத்திற்குமுன்பு ஞானமுள்ள ஒரு அரசன் ஒரு சிறு நாட்டை ஆண்டுவந்தான். அக்காலத்தில் மக்கள் அவர்களுக்கேற்ற வீடு கட்டிக்கொள்ளத் தெரியாத காரணத்தால் மலைகளில் வெட்டப்பட்ட குகைகளில் குடும்பம் குடும்பமாக வசித்துவந்தார்கள். இரவு நேரங்களில் குகையில் வெளிச்சம் இல்லாததால், மக்கள் அதிகக் கஷ்டப்பட்டார்கள். முக்கியமாகப் பகலும் இரவும் வேலை செய்த பெண்களே மிகவும் துன்புற்றனர். அரசருக்கும், பிரபுக்களும் தங்கள் வீடுகளில் போதுமான விளக்குகள் இருந்தன. இரவு நேரத்தில் வெளிச்சமின்மையால் தமது குடிகள், முக்கியமாய் பெண்கள்படும் அவதியை அறிந்த அரசர் அனுதாபங்கொண்டு, அதற்கு ஒரு வழி கண்டுபிடிக்கத் தீர்மானித்தார். அரசரும், பிரபுக்களும் கூடி ஆலோசித்து, சிறு விளக்குகள் செய்யும் ஒரு இடம் ஏற்படுத்தி ஒவ்வொரு வீட்டிலுமிருந்து ஒருவர் அங்கு அனுப்பப்படவேண்டுமென்றும், அங்கு விளக்குச்செய்து உபயோகிக்கும் விதத்தை அவர்கள் கற்றுக்கொண்டு, தங்கள் வீடுகளில் அதனை ஏற்றவேண்டுமென்றும் ஏற்பாடாயிற்று.

அந்தப் பயிற்சி இடத்திற்கு ஆண் பிள்ளைகளையே அனுப்பவேண்டுமென்று மந்திரிகள் வற்புறுத்தினார்கள். அரசருக்கு அந்த ஆலோசனை விருப்பமில்லாவிட்டாலும் அதற்கு உடன்பட்டார். இந்தச் செய்தி அறிந்த மக்கள் மகிழ்ந்து ஞானமும், அன்பும்பெற்ற அந்த அரசனை வாழ்த்தினார்கள்.

அதன்படி, ஆண்பிள்ளைகள் சென்று விளக்கு செய்து உபயோகிக்கும் விதத்தைப்பற்றி கற்றுக் கொண்டு, ஆளுக்கொரு விளக்குடன் வந்து வீட்டை ஒளியாக்கினார்கள். ஆனால், அக்காலத்தில் தீக்குச்சி இல்லாததால், விளக்கு அணைந்தபோது அரண்மனைக்குச் சென்று அதனை ஏற்றிக்கொண்டு வந்தார்கள். ஒருநாள் மன்னர் தமது புதிய திட்டம் எப்படியிருக்கிறதென்று அறிய விருப்பங்கொண்டு இரவில் பல வீடுகளுக்குச் சென்றார்.

ஒரு வீட்டில் எதிர்பாராதபடி இருள் சூழ்ந்திருந்தது. அரசர் காரணமென்னவென்று விசாரித்தார். அவ்வீட்டிலிருந்த விளக்கை மகன் ஊருக்கு எடுத்துச் சென்றிருப்பதாகத் தாய் சொன்னாள். மேலும் பல இருள் சூழ்ந்திருந்த வீடுகளில் இருந்த பெண்கள், தங்களுக்கு விளக்கை உபயோகிக்கவே தெரியாதென்றும், ஆண்கள் வெளியில் சென்றிருப்பதாகவும் கூறினார்கள். "அரசே! எங்கள் வீடுகளில் ஆண்பிள்ளைகளே இல்லை. அத

மார்க்ஸ் கல்லறை

கம்யூனிசக் கொள்கையின் பிதா என்று அழைக்கப்படுபவர் காரல்மார்க்ஸ்! அவருடைய கல்லறை இடிந்து கிடக்கிறதாம்—இலண்டன்மாநகரில்.

1883-ல் மார்க்ஸ், இலண்டனில் தான் வாழ்ந்ததும், இறந்ததும். அவருடைய சமாதி, இப்போது 'சிறு தகராறை'க் கிளப்பியிருக்கிறதாம், இலண்டனிலுள்ள முற்போக்காளரிடம்.

ஆண்டுதோறும் வரும் அவருடைய இறந்த நாளின்போது இரஷ்யர்கள் அங்கு வருவதும், மரியாதைசெலுத்துவதும் வழக்கம். கொஞ்சக்காலம் இது நின்றிருந்தது. ஸ்டாலின் இறந்த பின்னர், புதிதாக அரசியலை ஏற்றோரால், இடிந்துபோயிருக்கும் சமாதி கவனிக்கப்படுமென்றும், சீர்திருத்துவதற்குப் பணம் செலவழிக்கப்படலாமென்றும் கருதப்பட்டது.

ஆனால் இலண்டனிலுள்ள கம்யூனிஸ்டுகள், "நாம் என்ன கையாலாகாதவர்களா? எதற்காக அவர்கள் உதவி செய்யவேண்டும். மார்க்சுக்கு மரியாதை செய்யமாட்டாமோ, நாம்" என்று கிளம்பி அதற்கென ஒரு நிதியும் சேர்த்திருக்கின்றனர்.

இன்னும் சில மாதங்களில் அங்கு செல்வதாகயிருக்கும் புல்கானின் அவசியம் மார்க்ஸ் கல்லறைக்கும் செல்லுவார் என்பதால் அதற்குள்ளாகவே அது செப்பனிடப்படவேண்டும் என்றும் ஆர்வத்துடன் இருக்கிறார்களாம் —இலண்டன் முற்போக்குவாதிகள்.

னால் எங்கள் வீட்டில் ஒளி இருக்கக்கூடாதா? தயவுசெய்து எங்கள் வீட்டிலும் ஒளிஏற்றும்" என்றுசில வீடுகளில் கெஞ்சினார்கள்.

இதைக் கண்டு வெகுண்ட அரசர் தமது பிரபுக்களை வருவித்து, "நீங்கள் என்னை ஏமாற்றிவிட்டீர்கள்!" என்றார். பிரபுக்கள் பயந்து திடுக்கிட்டு மௌனமாயிருந்தார்கள்.

"நான் ஒவ்வொரு வீட்டிலும் ஒளி இருக்கவேண்டுமென்று சொல்லவில்லையா? நீங்கள் ஆண்பிள்ளைகளுக்குமாத்திரம் விளக்கேற்றக் கற்பித்தால் போதுமென்று கூறினீர்கள். அதனாலேயே பல வீடுகளில் இன்னும் இருள் சூழ்ந்திருக்கிறது. ஆண்பிள்ளைகள் தங்கள் வேலைக்குச் செல்லும்பொழுது, விளக்கையும் தங்கள் உபயோகத்திற்கு எடுத்துச் செல்கின்றார்கள். அதனால் வீட்டுக்கு என்ன பயன் ஏற்படும்? ஒரு பெண் தனக்கு மற்றொரு குடும்பத்தை ஏற்படுத்தும் வரை வீட்டிலேயே இருக்கிறாள். ஆகவே முதலில் பெண்களே விளக்குசெய்து அதனை ஏற்றப் படிக்கவேண்டும். அதன் மூலம் அவர்கள் தங்கள் வீடுகளை ஒளியாய் வைத்திருப்பதுடன் தாங்கள் மணமான பின் ஏற்படுத்தும் புதிய வீட்டையும் ஒளிமயமாக்குவார்கள். அப்போது எனது நாட்டின் எல்லா வீடுகளிலும் ஒளி பிரகாசிக்கும். புத்தியற்ற ஆலோசனைக்காரரே! துரிதமாகச்சென்று நாட்டிலிருந்து பெண்பிள்ளைகள் இங்கு வந்து விளக்கேற்றக் கற்றுக்கொள்ள ஏற்பாடு செய்யுங்கள்" என்றார் மன்னர்.

அரசர் மாளிகையில் திரளான பெண்கள் கூடி ஆண்களைவிடத் துரிதமாகவும், நேர்த்தியாகவும் விளக்குச் செய்யவும் ஏற்றவும் படித்துக்கொண்டார்கள். அத்துடன் பெண்கள் தங்கள் திறமையினால்அதனைத் தாய்மார்களுக்கும்கற்றுக்கொடுத்தார்கள். அதன்பின்பு அந்நாட்டின் வீடுகளிலெல்லாம் ஒளி பிரகாசித்தது. மக்கள் மகிழ்ந்தார்கள். அரசர் களிப்படைந்தார். மன்னரின் மதிநுட்பத்தை நாட்டினர் போற்றிப் புகழ்ந்து கொண்டாடினார்கள்.

இவ்விடத்தில் சாக்ரடிஸ் தமது கதையை நிறுத்தி, மாணவர்களே! நான் சொன்ன இக்கதையின் கருத்து என்ன? என்று கேட்டார்.

மாணவர்கள் மௌனம் சாதித்தார்கள். 'யோசித்துச் சொல்லுங்கள், அது கடினமானதல்ல" என்றார் சாக்ரடிஸ்.

ஒரு சிறுவென், "நாம் விளக்கை இரவானபின் அணைத்துவிடக் கூடாது" என்றான்.

மாணவர்கள் பதில் திருப்தியின்றி இருந்ததால், சாக்ரடிஸ் ஆசிரியரை நோக்கி, "ஐயா! நீங்கள் உமது அபிப்பிராயத்தைக் கூறுங்கள்" என்றார்.

"கல்வியே ஒளி. பிள்ளைகளைப் பெற்று அவர்களை வளர்க்கும் பொறுப்பேற்கும் பெண்களுக்கு அந்தக் கல்வி இன்றியமையாதது. பெண்களே இல்லத்தின் ஜோதிகள். சிறு பெண்கள் பள்ளிக்குச் சென்று கல்வி ஒளியைப் பெற்றால் பிற்காலத்தில் அவர்கள் ஒளி நிரம்பிய குடும்பத்தை நிறுவி, அறிவுள்ள, சுத்தமுள்ள, ஆரோக்கியமுள்ள பிள்ளைகளை வளர்ப்பார்கள். பெண் கல்வி இல்லாத வீடுகளில் ஒளி ஏற்றப்படவில்லை. ஆகவே, அதற்கு நாம் முயற்சிசெய்து வரவேண்டும்" என்று அலங்காரமாகக் கூறினார் ஆசிரியர்.

[ஆரம்பக் கல்வி]

"பல நாடுகளிலும் பணமுள்ளவர்கள்தான் சர்வகலாசாலைகளில் உயர் படிப்புக்குச் செல்லமுடியும். ஆனால், ரஷ்யாவில் புத்திசாலியாயிருந்து முன்னுக்கு வரக்கூடிய இளைஞன் யாராயிருந்தாலும் அவனுக்கு உயர்படிப்புக்கு சந்தர்ப்பமளிக்கப்படுகிறது. இது மிகவும் முக்கியமான விஷயமென்றே நான் கருதுகிறேன். ஜார் காலத்து ருஷ்யாவில் நூற்றுக்கு 76-பேருக்கு கல்வி வாசனையே கிடையாது. இரண்டாவது உலகப்போர் மூள்வதற்கு முன்பே, நாங்கள் எல்லோருக்கும் கல்வி தந்துவிட்டோம்"

—க்ருஷ்சேவ்

"அந்தக் கூட்டம்!"

"ஏனய்யா, அந்தத்தொல்லை? அதனால் தானே நாங்கள் திராவிடநாடு கேட்கிறோம். அப்போது பார்லிமெண்டில் இத்தனை பேர் இருக்கமாட்டார்கள். நீங்கள் சிரமப்பட வேண்டிய அவசியமும் இருக்காதே" என்று கேட்க அங்கு யாரும் இல்லாததால் நேருபண்டிதர் அவர்கள் நீண்டதோர் விளக்கம் தந்திருக்கிறார், டில்லி பார்லிமெண்டில்.

விளக்கத்தைக் காணும்போது வேதனையும் வருத்தமுமே, வருகிறது நமக்கு.

அவ்வளவு பேர் இருக்கிறார்களாம், பார்லிமெண்டில்! அரசியல் விருந்துகள் அந்நிய நாட்டினருக்கு மரியாதை இதுபோல முக்கிய நிகழ்ச்சிகள் நடைபெற்றால் எல்லோரையும் அழைப்பது சாத்யமாக இல்லையாம்—ஏனெனில் **750** பேர், இருக்கிறார்களாம், பாராளும் சபையின் பிரநிதிகளாக.

"ஐயா! இது அடுக்குமோ? நாங்கள், மக்கள் பிரதிநிதிகளன்றோ, எங்களை மதியாதது ஏன்? ரஷ்யத் தலைவர்களை வரவேற்க, எங்களுக்கேன் அனுமதியில்லை. இரண்டொரு ஊர் விமானக்கூடத்துக்குச் செல்லவும் விசேட அனுமதி கேட்டோம். மறுத்துவிட்டார்களே, ஏன்? இதுதானா, மக்களின் பிரதிநிதிகளுக்கு நீங்கள் காட்டுகிற மரியாதை? யார் யாரோ சென்று வரவேற்பிலும் விருந்திலும் கலந்துகொள்ளும்போது, எங்களை மட்டும் அழையாதது ஏன்?" என்று நாஜே என்பவர் கேட்டிருக்கிறார் நேரு பண்டிதரை. நாஜே, ராஜ்ய சபை என்று அழைக்கப்படும் மேல் சபையிலுள்ள ஜனநாயக எதிர்க் கட்சிக்குத் தலைவர்!

அதற்குப் பண்டிதர் அளித்த பதில்தான் விசித்திரமாக உள்ளது—மொத்தம் இரண்டு சபைகளிலும் சேர்த்தால் 750 பேர் இருக்கிறார்களாம்! எப்படி, இவ்வளவு பெரிய கூட்டத்தை ஒவ்வொரு வரவேற்புக்கும் அழைக்க முடியும்? எனக்கேட்கிறார்!

பாராளும் சபை அங்கத்தினர்களைப் பார்த்து 'இவ்வளவு பெரிய கூட்டத்தையா!' என்கிறார்.

அந்தக் கூட்டம், தான், ஒரு பெரிய நாட்டின் தலைவர் என்று சொல்லிக்கொள்ளவும், இந்தியா எவ்வளவு பெரிய நாடு தெரியுமா என்று காட்டிடவும், பெருமை பேசவும் தேவை! ஆனால், இதுபோல உரிமையும் மரியாதையும் பெறவோ — வேறுசிலர் — அவர்களிலே சீமான்கள் பூமான்கள் இருப்பார்கள்.

இவ்வளவு பெரிய கூட்டமாம்—யாரை அழைப்பதெனத் தெரியவில்லையாம் — கூறுகிறார், நேரு. ஏனோ, இத்தொல்லை, வீணாக! பிரிந்து வாழ விரும்புவோரை விடுவித்தால், கூட்டமும் குறையும்—சிரமும் இவ்வளவிருக்காதே? செய்வாரா, அச்சீலர்! ★

ஒரு உதாரணம்

ஐம்பத்தாறுபேர்! ஒவ்வொருவர் கையிலும், விதவிதமான உணவுத் தட்டுகள்! அக்காரவடிசல்—புளியோதரை—தயிரன்னம்—தேன் குழல்—தித்திப்புமிக்க பாயசம்—பஞ்சாமிர்தம், இதுபோல, 56-தட்டுகளிலும் 56-விதமாக.

இதைக்கொண்டு இருபதினாயிரம் பேருக்கு, ஒவ்வொரு நாளும் சாப்பாடு போடலாமாம்—'அயின் அக்பரி'—எனும் நூல், தெரிவிக்கிறது. ஆறு தடவைகள் குளிப்பாட்டி, ஒவ்வொரு முறைக்கும் புத்தம் புதிய ஆடை உடுத்தி, அலங்கரித்தபின் 56-தட்டுகளையும் கொண்டுபோய் வைப்பராம்.

ஏதேது! பெரிய சமஸ்தானாதிபதி போலிருக்கிறது—வெகு ஷோக்கான பேர்வழி போலும்—என்று எண்ணத் தோன்றும் உங்களுக்கு. தங்கத்தட்டிலே, சகல வித உணவு வகைகளும் எதிரேவைக்க இதிலே கொஞ்சம், அதிலே கொஞ்சம் எடுத்து ராஜா சுவைக்க, மீதமானதை அரண்மனையில் வாழும் அத்தனைபேரும் உண்டு களிப்பரெனப் பழைய ராஜாக்களைப் பற்றிப் படித்திருக்கிறோம். அப்படிப்பட்ட ராஜாக்களுக்கெல்லாம் மேலானவர், இவர்—அதுமட்டுமல்ல, அந்த ராஜாக்களுக்காவது, பட்டேலின் சட்டம் வந்து படாடோபம் குறைய வழியேற்பட்டது. இவரையோ, இன்னும் யாரும் நெருங்கவில்லை! மாறாக நித நிதமும், மந்திரிகளுட்பட யாவரும் சென்று இன்னும் பூஜித்துக்கொண்டுள்ளனர்—கருணை கிட்டாதா என்று காத்துக்கொண்டுள்ளனர் — கையில் கிடைத்ததையெல்லாம் கொண்டுபோய் காணிக்கையாகச் செலுத்திவிட்டு, கன்னத்தில் போட்டுகொண்டு வருகின்றனர். அவர் பெயர் ஜகன்னாதர்! இருப்பது பூரியில்! இதுவரையில், அவர் வாய்திறந்தும் பேசியதில்லை—இருந்த இடத்தைவிட்டும் அசைந்ததில்லை. ஈசனாயிற்றே, அவர், அவருக்குத்தான் இத்தனை ராஜோபசாரமும்!

*

உலகைக் காக்கவும், துஷ்ட நிக்ரக சிஷ்டபரிபாலனம் செய்யவும் நமது 'ஜன்ம பூமியில்' எழுந்தருளியிருக்கும், ஈசுவரர்கள் எண்ணற்றவர்கள். அவர்கள் எந்தத் துஷ்டர்களைத் தண்டித்தனரோ, எந்தப் பக்தனைக் காப்பாற்றினரோ, அறியோம் நாம்! அந்தப் பாக்கியம் கிடைத்திருந்தால் "பாரத மண்ணிலே" பகவத்சிங்கும், திருப்பூர் குமரனும், பலியாகியிருக்க வேண்டியதில்லை. விழியைக் கொஞ்சம் அசைத்தே, வெள்ளையனை விரட்டியிருக்கலாம்! வேதனையும் பஞ்சமும் நாட்டில் மிகுந்தபோது, பார்வதியைக் கூப்பிட்டு, 'போடி! பெண்ணே! உன் புத்திரர்கள் குறையைத் தீர்த்துவா' என்று அனுப்பியிருக்கலாம். ஆனால், அப்படி ஏதுவும் இதுவரையில் நிகழ்ந்ததில்லை; என்றபோதிலும் அவருக்கு அனுதினமும் நடைபெறும் அறுகால பூஜையும், அபிடேகமும், ஆராதனையும் நின்றதாகவும் தெரியவில்லை.

அணுகுண்டினைத் தடைசெய்யும்படி அமெரிக்காவுக்கு அறிக்கை விட்டுவிட்டு, அதே நேரத்தில் ஆண்டவன் சந்நிதானத்துக்கு வந்து, சர்வேஸ்வரனல்லவோ, நீ? புவன முழுவதும் உன்பொருளல்லவோ! பார்வதிநாதா! பாரப்பா, எம்மைக் கடைக் கண்ணால், என்று கும்பிடும் 'அறிஞர்களல்லவோ இன்னுமிருக்கின்றனர். அதுமட்டுமா? இவ்வளவு 'பொருளை'யும் அனுபவித்துக்கொண்டு, ஏராளமானவர்கள் சாப்பிட வேண்டிய பொருளையும் வீணாக்கிய வண்ணமிருக்கும், இந்தப் பிரபுக்களைப் பற்றிக் கேட்க சோஷியலிசம் பேசும் சுந்தரர்களுக்குக்கூட வன்றோ, அச்சம்?

இவ்வளவு போக போக்கியத்துடன் விளங்கும், ஈசர்களைவிட, இப்படிப்பட்ட ஈசர்களுக்காகக் கோயில்களை உண்டாக்கி, அவைகளை கொஞ்சுமெழில் பூஞ்சோலைகளாக இன்னும் வைத்துக்கொண்டு இன்பமாகப் பவனி வருவோர்களாக இருக்கிறார்களே, அவர்தம் புத்தி கூர்மையும், செயல் வன்மையுமே, நம்மை ஆச்சரியத்தில் வைக்கிறது! அடடா! எந்தக் கோயிலை எடுத்துக்கொண்டு பார்த்தாலும், அது கட்டப்படுவதற்கு முன், எவ்வளவெவ்வளவு நிகழ்ச்சிகள் நடைபெற்றிருக்கவேண்டும். இது பொற்றாமரைக் குளம்!—குளித்தால், பிணியெலாம் நீங்கும். கமலாலயமே 'ஸ்நானம்' செய்வீர்! சிவ பதவி பெறுவீர்! கும்பகோணம் கும்பேஸ்வரர் குளம்—ஆகா! புண்ணிய நதிகள் யாவும், பன்னிரண்டாண்டுக்கு ஒரு முறை இங்கேவந்து உட்காருகின்றன. இப்படி, மகாத்மியம் இல்லாத இடங்களே கிடையாது! 'ஸ்தல புராணங்கள்' இல்லாத கோயிலே இருக்க முடியாது. கூழுக்கும் பொன்னுக்கும் பாட்டெழுதிப் பிழைத்த புலவர்களுக்கு, நல்ல வேட்டை கிடைத்திருக்கும்போலும் அப்போது! அவனவனுக்கும், தான் தான் கட்டிய கோயிலுக்கு, கீர்த்தியைக் கொணர நல்ல 'விளம்பரம்' செய்திருக்க வேண்டும்!

காக்கைக்குத் தன் குஞ்சும் பொன் குஞ்சு!—இந்தக் காலத்து சினிமா முதலாளிகளுக்குத் தாங்கள் தயாரித்த படங்களைப் பற்றி விதவிதமாக விளம்பரம் செய்ய ஆசையிருப்பதுபோல, அந்தக் காலத்து அரசர்களுக்கும் இருந்திருக்கும் போலும்!

இதைவிட ஆச்சரியம், இப்படிப்பட்ட அரசர்களைப்பிடித்து ஆரியர்கள் மண்டூகங்களாக்கியதுதான்! வாள் எடுத்தால் வையகமே கலங்கக்கூடிய அளவுக்கு பேரெடுத்த பெரிய பெரிய மன்னர்கள்கூட, பூதேவர்தம் காலடி பணிந்து, 'கதி நீயல்லால் வேறில்லை' என்று கிடந்திருக்கிறார்கள். சொல்லே சட்டம்! பார்வையே வேதம்!—என்றும், பயந்து பணிந்திருக்கிறார்கள். இதோ ஒரு வேந்தன்—தலைப்பிலே தந்த பூரி ஜகன்னாதர் கோயிலுக்குக் காரணமானவன். பெயர் இந்திரதம்மன் என்பதாம்!

அவனுக்குப் புதியதோர் நகரம் நிர்மாணிக்க வேண்டுமென்று ஆசை பிறந்தது.

அதற்கு இடம் பார்த்து வரும்படி, தன் அவையிலிருந்த ஆரியர் ஒருவரைக் கேட்டுக்கொண்டான்.

ஆரியரோ கொஞ்சம்யூகசாலி! அரசனிடம் விடை பெற்றுக்கொண்டு, சென்றார். சின்னாள் கழிந்ததும், திரும்புகிறார்.

"ஆரியரே இடம் பார்த்தீரா, நகரம் எழுப்ப?"

"நகரமா? வேந்தே! உங்கள் நாமம் ஏழேழ் தலைமுறைகளுக்கும் விளங்கும்படியான நற்காரியம் ஒன்றைச் செய்யவே இடம் பார்த்து வந்துவிட்டேன்"

"அப்படியா? எங்கே!"

"அருமையான இடம்! அங்கே ஒரு காக்கையைக் கண்டேன்!"

விற்பனையாளர்களுக்கு

எம்மிடம்

அரும்பெரும் தலைவர்கள்,
அன்பான உறவர் குடும்பங்கள்,
அழகிய சினிமா நட்சத்திரங்கள்

கொண்ட

பொங்கல் வாழ்த்துகள்

பலவண்ணங்களில் விலை 6 பை முதல் 2½ அணா வரையில் 25% கழிவுடன் கிடைக்கும். விபரங்கட்கு 12 அணா தபால் தலை அனுப்புக.

பகுத்தறிவுப் பண்ணை
115, வண்டிகாரத் தெரு, தஞ்சை.

"இதிலென்ன அதிசயம்? காக்கை எங்கேயும் தான் இருக்கிறது!"

"ஆனால், இது, பக்தியுள்ள காக்கை."

"காக்கைக்குப் பக்தியா?"

"தங்களைப் போலத்தான் நானும் சந்தேகப்பட்டேன். சவிஸ்தாரமாக விஷயத்தை விசாரித்தபோது, நானே ஆச்சரியப்பட்டுப்போனேன். அது, தினசரி, அந்த இடத்தில்தான் சந்தியா வந்தனம் செய்வது வழக்கமாம்!"

"என்ன? காக்கையும் கூடச் சந்தியா வந்தனம் செய்கிறதா!"

"இதே சந்தேகம்தான் எனக்கும் எழுந்தது — அதைக் கேட்டபோது! ஆனால், அது சாதாரண காக்கையல்ல தேவலோகத்தைச் சேர்ந்த தேவன் ஒருவனின் உருவம் அது. யாரோ, ஒருவன் அவனை, காக்கையாகும்படி சபித்தானும்! சாபம் தீர வழி கேட்டபோது, அந்த இடத்தில் போய் தினசரி பகவானைப் பூஜித்தால், சாபவிமோசனம் கிடைக்குமென்று சொன்னனும்!!"

"அப்படியா?"

"ஆம், வேந்தே! அந்த இடத்தில், நகரம் எழுப்புவதற்குப் பதில், மாபெரும் கோயில் ஒன்று எழுப்பி விட்டால்—தங்கள் பெயரும், ஜொலிக்கும். ஈசுவரனுக்கு அரியதோர் சேவை செய்தபுண்யமும் உண்டு உங்களுக்கு"

பிறகென்ன! அரசன் என்ன அறிவொளி பூத்தயுகத்திலா இருந்தான்? உத்தரவு பிறந்தது! உளிச்சப்தம் கேட்டது! கோயில் கட்டப் பெற்றது!– இன்னும், நமதுமக்கள் போய்க் கும்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள். அது மட்டுமல்ல, 56 விதமான உணவுகளை "அவாள்" சிரமப்பட்டுசாப்பிட்டுவிட்டுச் சந்தனம் பூசிச்சாய்ந்துகிடப்பதையும் பார்த்துப் பரவசப்பட்ட படியும் இருக்கிறார்கள்'—பூரி ஜகன்னதர் கோயில் எழுந்த விதம் இது. இந்த கோயில் மட்டுமல்ல—பூதேவரின் புகலிடம் எதுவுமே இப்படி உருப் பெற்றவைகள்தான்.

✶

முகவரி மாற்றம்

திராவிடன் அலுவலகம்

சோமு அச்சகம்

1-12-55 முதல் கீழ்க்கண்ட முகவரிக்கு மாற்றப்பட்டிருக்கிறது.

'திராவிடன்'
16/99, அம்மன்கோயில் தெரு
வால்டாக்ஸ் ரோடு, சென்னை-1

"தன்னைப்பற்றி!"

"ஜவஹர்லால் கி, ஜே!" காத்துக் கொண்டிருக்கிற கூட்டத்திற்கிடையே வேகமாகச் செல்லும் போது அவர் நிமிர்ந்து பார்த்தார். கைகூப்பினர். வெளுத்த கடுகடுப்பான அவர் முகம் மலர்ந்தது. அன்பு கலந்த சிரிப்பு அது. மக்கள் அதைப்பார்த்தும் சிரித்து ஆரவாரம் செய்தனர்.

சிரிப்பு மறைந்துவிட்டது. மீண்டும் முகத்தில் கடுகடுப்பு. கவலை அந்த சிரிப்பும், பாவனையும் அநேகமாகப் பொய்யோ என நினைக்கும் படியிருந்தது. மக்களின் நல்லெண்ணத்தை சம்பாதிக்கப் பின்பற்றும் தந்திரமாக இருக்குமோ?

இன்னும் பார்ப்போம். மாபெரும் ஊர்வலம். லட்சக்கணக்கான மக்கள், அவருடைய காரைச் சூழ்ந்து ஆனந்தமடைகின்றனர். ஆரவாரம் செய்கின்றனர். காரில் நன்ருக நிமிர்ந்து நிற்கிறார். மீண்டும் திடீரென்று அந்தப் புன்முறுவல். பலமான சந்தோஷச் சிரிப்பு. கடுகடுப்புக் காணப்படவில்லை. கூட்டமும் அவரோடு சிரிக்கிறது. ஆனால் ஏன் என்று அதற்கே தெரியாது. அவர் தன்னைச் சூழ்ந்துள்ள மக்களில் தன்னையும் ஒருவனாக மதிக்கிறார். கூட்டம் மகிழ்ச்சியடைகிறது. அன்பு காட்டுகிறது. நேசிக்கிறது. ஆனால் அந்த சிரிப்பு மறைந்துவிட்டது. அதேவெளுத்த கடுகடுப்பான முகம்.

நேரு, பொதுக் கூட்டங்களுக்கு மத்தியில் அலட்சியமாயும், அநாயாசமாயும் நடிப்பதில் வல்ல கலைஞராகிவிட்டார். வெளிப்பார்வைக்கு சாதாரணமாகக் காணப்பட்டாலும் அந்தரங்கத்தில் எதைக் குறிவைத்துக்கொண்டிருக்கிறார்? என்ன ஆசைகளோ? என்ன அதிகார இச்சையோ? எப்படியானாலும் சரி இந்தக் கேள்விகள் ரசமானவை. ஏனென்றால் நம்முடைய விருப்பத்தையும், கவனத்தையும் இழுக்கும் மனிதராக நேரு இருக்கிறார். அதுமட்டுமல்ல. அவர் தற்கால இந்தியாவோடும், வருங்கால இந்தியாவோடும் இணைக்கப்பட்டிருக்கிறார். அவர் இந்தியாவுக்கு நன்மையோ அல்லது தீமையோ செய்யக்கூடியவராகவுமிருக்கிறார்......

நேருவைப்போல அரும்பெருங் காரியங்களையும், நல்ல காரியங்களையும் செய்கிறவர்கள் ஜனநாயகத்துக்கு ஆபத்தானவர்கள். அவர் தன்னை ஒரு ஜனநாயகவாதி என்றும் சொல்லிக்கொள்கிறார் எப்படியிருந்தாலும் கடைசியில் உள்ளம் ஆசைக்கு அடிமையாகிவிடுகிறது. ஆசைகளும், அடக்க முடியாத மனத் தூண்டுதல்களும் நியாயத்திற்கு பொருந்திய தாக்கப்பட்டுவிடுவது சகஜம். மனோதத்துவத்தை அறிந்தவர்களுக்கு இது நன்ருகத் தெரியும்.

அவருடைய மனப்போக்கு இலேசாக திரும்புகிறதென்று வைத்துக் கொள்வோம். அவ்வளவுதான், மெதுவாக நகரும் ஜனநாயகத்தைத் தூக்கியெறிந்துவிட்டு சர்வாதிகாரியாக மாறிவிடுவார் அதற்குப் பிறகும் ஜனநாயகம், சோஷலிசம் என்ற சொற்களை அவர் கையாளலாம், ஆனால் பாஸிஸம் அப்பேச்சுகளைப் பேசி, பேசி, வலுவடைந்த பிறகுதானே அவற்றை உதவாக்கரை என்று உதறித் தள்ளிவிட்டது?

✷

இயல்பிலோ, நம்பிக்கையிலோ நேரு பாஸிஸ்டு அல்ல. பொதுக் கூட்டங்களில் அவர் பேசும்போது ஒவ்வொருமனிதனிடத்திலும்தனித்தனியே சந்தித்துப் பேசுகிறது போலப் பேசுகிறார். அந்தக்குரலைக் கேட்கும் போதும், உணர்ச்சி வசமான அந்த முகத்தைப் பார்க்கும் போதும்அவைகளுக்கடியில் என்ன எண்ணங்கள், என்ன விதமான ஆசைகள். ஆவேசங்கள் மறைந்துள்ளனவோ? என்ற சிந்தனை ஏற்படுகிறது.

மேடையில் பேசும்போது தொடர்ச்சியாகப் பாயும் தனது எண்ணங்களில் கலந்துவிடுகிறார். மற்ற நேரங்களில், 'அவர் தானா இவர்?' என்ருகிவிடுகிறது. அவர் மனம் எங்கெங்கோ கற்பனையில் நீந்த ஆரம்பித்துவிடுகிறது. கற்பனை மனிதர்களுடன் மனதிற்குள்ளாகவேபேசத்தொடங்கிவிடுகிறார்.

(4-ம் பக்கம் பார்க்க)

தம்பி,

அன்னிய நாட்டுச் சகோதரர்களே! வாருங்கள், எங்கள் ஊருக்கு! வந்து பாருங்கள், எங்கள் நகரத்தை!

சிரித்து மகிழ்ந்து அளவளாவும் இனிய சுபாவமும், அதிதிகளை அன்புடன் வரவேற்று உபசரிக்கும் நற்பண்பும் கொண்டவர்கள் எங்கள் மக்கள். எங்கள் நகரில் கொடிய குளிரும் பனியும் உண்டு. ஆனால் எங்கள் இதயங்கள் மென்மையானவை-அன்பின் கதகதப்பு அவற்றில் நிறைய உண்டு.

சண்டை சச்சரவுகள் அற்ற சமாதான உலகம், அடக்குவோர் அடக்கப்பட்டோர் இல்லாத உலகம், அனைவருக்கும் இன்பகரமான வாழ்வை அளித்திடச் சகல இனத்தவரும் நிறத்தவரும் சகோதரர்களாக ஒருமித்துப் பணியாற்றும் நல்லுலகம்-இதுவே எங்கள் வேட்கை!

சோவியத் நாடு எனும் ஏடு, இந்த அன்பழைப்பினை வெளியிட்டிருக்கிறது; இதே கருத்துப்பட, இங்கு மக்களின் மகத்தான வரவேற்பினைப் பெற்று உள்ளம் பூரித்த புல்கானின், குருஷேவ் இருவரும் பேசியுள்ளனர்.

காமராஜரே, ரஷ்யா போகிறாராம்!

ரஷியா போய்விட்டு வந்தவர்களெல்லாம், (இராஜகுமாரி அமிர்தகௌர் உட்பட) அங்கு உள்ள வளம், வசீகரம், இவைகளை வழங்கிய முறை, இவை குறித்துப் பாராட்டினர். ரஷியா செல்லாவிடினும், அந்தப் புது முறை பூத்திடும் பொன்னுலகு பற்றிய ஆய்வுரைகளைப் படித்து இன்புற்றோரும், அந்நாட்டின் ஏற்றம் எழில், பற்றி மகிழ்ந்து பேசினர்.

காமராஜர் இந்த இருவாய்ப்புகள் பெற்றாரில்லைஎனினும், ரஷியநாட்டு முறைபற்றிக் குறைகூறிப் பேசக் கூசவில்லை.

ரஷியாவை ஏதோ சொர்க்கபூமி என்று பேசுகிறார்கள் — சொக்கிப் போகிறார்கள். சுத்தத் தப்பு. அதெல்லாம் ஒன்றுமில்லை, அது ஒரு பெரிய ஜெயில் மாதிரி. சோத்துக்கே அங்கு கஷ்டம். அங்கு சுதந்திரம் கிடையாது, சுகமும் கிடையாது—என்று காமராஜர் பேசுவது வாடிக்கை. அவருக்கு ரஷியா செல்ல வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. பயணம், பக்குவத்தையும் பயனையும் அளிக்கவேண்டும்.

ரஷியா சென்று வருபவர்களைக் கேலி பேசும் காமராஜர், ரஷியா போகும் நிலை ஏற்படுவதுகூட ஆச்சரியமல்ல—அவரை ரஷியாவுக்கு அழைத்துக்கொண்டு வருவதாக ராமமூர்த்தி வாக்களித்தாராமே, இந்தப் பூணாரம் பூண்ட புதுமைதான் எல்லாவற்றினையும்விட ஆச்சரியமானது.

வெளி உலகத் தொடர்பு கொள்வதிலே விசேஷ அக்கறையோ அவசரமோ காட்டாமலிருந்துவந்த சோவியத் தலைவர்கள், இப்போது சிலகாலமாக, பல்வேறு நாடுகளுடன் நேசத் தொடர்புகள்கொள்ள முயற்சிக்கிறார்கள்—அமெரிக்கா அச்சப்படும் அளவிலும், பிரிட்டன் பீதி கொள்ளும் விதத்திலும் வெற்றியும் பெறுகிறார்கள்.

குபேரபுரியின் சொந்தக்காரர்கள் சாம்ராஜ்யாதிபதிகள் என்ற வகையில், முறையே அமெரிக்காவும் பிரிட்டனும் உலகில் உலவி உயர் இடம் கேட்டுப் பெறமுடிந்தது, உலகில் இல்லாமையை விரட்டி அடித்து, ஏழை எளியோருக்கு வந்துற்ற இடர்ப்பாடுகளை ஒழித்துக்கட்டி, எல்லோர்க்கும் எல்லாம் எனும் தூய கருத்து நடைமுறையில் மலர்ந்து மணமளிக்கத் தக்கதோர் புது முறை கண்ட நாடு என்ற முறையில், சோவியத் எவருடைய கவனத்தையும், ஏழை எளியோரின் அன்பையும், பெறத்தக்க ஒப்பற்ற நிலையில் இருக்கிறது.

முப்பதாண்டுகளுக்கு மேலாகவே இந்த அதிசயபுரிபற்றி, கவிஞர்கள் பாடிவந்தனர், இலட்சியவாதிகள் புகழ்ந்து வந்தனர், பொதுமக்கள் பூரிப்புடன் பாராட்டிவந்தனர்—எதேச்சாதிகாரிகளும் ஏய்த்துப் பிழைத்திடும் போக்கினரும், மதவாதிகளும் மாமிச மலைகளும் அருவருப்பையும் அச்சத்தையும் கக்கி வந்தனர், ஏளனமும் எச்சரிக்கையும் கலந்த குரலில் ஏசி வந்தனர்—எவரும் மறக்க முடியாததோர் மகத்தான நிலையில் சோவியத் நாடு முப்பதாண்டுகளுக்கு மேலாக இருந்து வருகிறது.

இல்லாமையை ஒழித்த இன்பபுரி என்றனர் மக்கள், ஈசனை மறந்த இழி நிலையில் உள்ளநாடு என்றனர் எத்தர்கள். வீரமும் தீரமும் பொங்கிடும் நாடு, விம்மிடும் ஏழையின் கண்ணீரைத் துடைத்த நாடு, உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்து வீணில் உண்டு கொழுத்திருப்போரை விரட்டிய வீரர் கோட்டம் சோவியத்நாடு, தூங்கிக் கிடந்த அரிமா, விழித்தெழுந்து, தன்பிடரியில்ஒட்டிக்கொண்டுகிடந்த பூச்சி புழுக்களை உதறித்தள்ளி விட்டு, காட்டரசன் என்ற நிலையில் அடவியில் ஆட்சி செலுத்துவது போல, சுரண்டிப் பிழைப்போர் சூது மதியினர், ரசபுடீன்கள் ராஜ கோலாகலர்கள், உழைப்பைத் திரு

டுவோர் ஊரை அடித்து உலையில் போடுவோர் போன்ற நச்சுப் பூச்சிகளை நசுக்கிச் சாகடித்து, மக்களின் சக்தியை முழு அளவில் மிளிரச் செய்து, உலகிலேயே ஒப்பற்ற நாடாக விளங்குவது சோவியத் நாடு என்று, உள்ளத்தில் உயர் கருத்துகளுக்கு இடமளிப்போர் பெருமிதத்துடன் கூறினர்— கோயில்களை இடித்துக் குளங்களைத் தூர்த்துவிட்டு, ஆத்மீகத்தை அழித்துவிட்டு, ஞானிகளை விரட்டிவிட்டு மதத்தை மாய்த்துவிட்டு, மக்களை மாக்களாக்கி, கொடுங்கோலால் அவர்களைக் கருத்துக் குருடர்களாக்கி பெரியதோர் சிறைக்கூடமாக நாட்டினை மாற்றி, இந்த உண்மைகளை உலகு அறிந்திடா வண்ணம் ஓர் 'இரும்புத் திரை' போட்டுக்கொண்டு, வன்னெஞ்சம் கொண்டதாகச் சோவியத் இருந்து வருகிறது, எங்கும் எந்த வேளையிலும் ஏதேனும் கலாம் விளைந்த வண்ணம் இருத்தல் வேண்டும் என்பதற்கான திட்டமிட்டு ஒற்றர்களையும், கூடிக் குடிகெடுப்போரையும் ஏவிவிட்டு பிற நாடுகளின் பலத்தை ஒடுக்கி, அங்கு அமளியை மூட்டிவிட்டு, அதன் இறுதியில், அங்கெல்லாம் தன் ஆதிபத்தியத்தைப் புகுத்தி, உலகினை ஆளவேண்டும் என்ற கெடுமதி கொண்டுள்ள நாடு, சோவியத்; தீயாரைக் காண்பதுவும் தீது, தீயார் சொல் கேட்பதுவும் தீது என்ற முறையில், திருவருளை இகழ்ந்து வாழும் அந்நாட்டுடன் எத்தகைய தொடர்பு கொள்வதும், தீது மட்டுமல்ல, ஆண்டவனுக்கே இழைக்கும் துரோகமாகும்! என்று தம்மை அருளாளர்கள் என்று கூறிக்கொண்டவர்கள், பீதி மூட்டினர்.

நாட்டிலே பெருங்காற்று வீசிடினும், காட்டிலே பெருங்கூச்சல் எழுந்திடினும், ஆற்றிலே வெள்ளம் கரைபுரண்டோடி வந்திடும் போதும், காட்டுத் தீ கட்டுக்கடங்காது பரவிடும்போதும் நில நடுக்கத்தின் போதும் தொத்து நோய் படை எடுத்திடும்போதும், பஞ்சம் பரவிடும் போதும் இயற்கைக் கோளாறு ஏது நேரிடும்போதும், "எல்லாம் ஈசன் சோதனை — மகேசனை மறந்தனர், ஐயன் தண்டிக்கிறார்—பக்தி குன்றிற்று, இன்னல் வந்துற்றது — நாத்தீகம் தலைகாட்டுகிறது, நாசம் தலைவிரித்தாடுகிறது — ஈசன் நாமத்தைப் பழியுங்கள்" என்று உபதேச மூலம் ஊர்மக்களை மிரட்டினர் ஆதீன கர்த்தாக்கள்; அவர்களின் அடி தொழுது காணிக்கை கொட்டிக் கொடுத்து, அந்தத் திருத்தொண்டு மூலமே தம்மைச் சீலர்கள் என்ற நிலைக்குக்கொண்டு சென்ற சுயநலக்காரர்கள், எதேச்சாதிகாரிகள், ஏன் என்று கேட்பவனையும் ஆகுமா என்று பெருமூச்சு விடுவோனையும், பாடுபடும் எனக்கா இந்தப் பஞ்சமும் நோயும்? உறிஞ்சிப் பிழைப்போனுக்கா உல்லாச வாழ்வும் வாழ்க்கையில் விருந்தும்? இடுப்பொடிய உழைக்கிறேன் இல்லாமை கொட்டுகிறதே, ஊருக்கு உழைக்கிறேன், உருக்குலைந்து போகிறேன், நான் வெட்டி எடுக்கும் இரும்பே எத்தரிடம் சிக்கி என் கரங்களில் தளைகளாகவும், என் நெஞ்சைத் துளைக்கும் குண்டுகளாகவும் உருவெடுக்கிறதே, ஈதென்ன அக்ரமம்? இதற்கோ நான் எலும்பு முறியப் பாடுபடுவது? நான் கட்டிக்கொடுக்கும் பாசறையும் நான் சமைத்துத் தரும் படைக்கலங்களும், நான் அமைத்துத் தரும் அரண்மனைகளில் புகுந்துகொண்டு அரசோச்சும் அக்ரமக்காரரிடம் சிக்கி, என்னையே அல்லவா கொடுமை செய்திடக் காண்கிறேன், இதுவோ நல்லாட்சி முறை? இதற்கோ நான் ஆயிரம் தொழில் செய்வது? காட்டில் உலவும் புலிக்குக் குகையும், நச்சுப்பல் கொண்ட பாம்புக்குப் புற்றும், நயவஞ்சக நரிக்குப் புதரும் கிடைக்கிறது; ஆயிரமாண்டுகள் அழகொளியுடன் நிற்கத்தகும் அரண்மனைகளும், மந்தகாச வாழ்வுக்கான மாளிகைகளும், மாற்றாரைத் திகைக்கச் செய்யும் கோட்டை கொத்தளம், அரண் அகழி ஆகியவற்றினையும் கட்டித் தந்திடும் எனக்குத் தங்க ஓர் குடில் இல்லை! இது அக்ரமம் என்று எடுத்துக் கூற எந்தத் தூய்மையாளனும் தோன்றிடக் காணோம், சாமான்யன் இதைக் கேட்டாலோ, சன்மார்க்கமறியாதான், சழக்கருடன் கூடி நாசமானோன், சர்வேசன் திட்டத்தை எதிர்த்திடும் சண்டாளன் என்று ஏசுகின்றனர், மலைமலையாக ஏடுகள் உள்ளன, படித்துப் படித்துப் பக்குவம் பெறுகின்றனர் என்று கூறுகின்றனர், மேதைகள் தீட்டியன மட்டுமல்ல, மேலே உள்ள தேவன் திரு அருளால் கிடைத்தன என்றும் இந்த ஏடுகள் பற்றிக் கூறுகின்றனர் — ஒரு ஏடும் எமக்கு நீதி வழங்குவது தான் முறை, என்று கூறக் காணோமே—என்று ஏழை கேட்கிறான்—பசியால் பதைத்து, கொடுமைக்காளானதால் குமுறி, துரத்தப்பட்டுத் துரத்தப்பட்டு மேலே சென்று தப்பிட வழி அடைபட்டுப்போன நிலையில், நிமிர்ந்து நிற்கவும், புருவத்தை நெரிக்கவும், கரத்தை உயர்த்தவும், கனல் கக்கவும் தொடங்குகின்றான்—உடனே ஆத்மீகப் பாதுகாவலரும் அரசியலில் எதேச்சாதிகாரம் செலுத்துவோரும் அவனைத் தாக்கிடுகின்றனர்—தாக்கும்போது, இவன் ரஷிய ஏஜண்டு, பொது உடைமைக்காரன், புரட்சிக்காரன், அழிவு வேலைக்காரன், ஆண்டவனுக்கு விரோதி என்று பழி சுமத்துகின்றனர்!

அப்போதெல்லாம், சோவியத் ரஷியாபற்றித்தான் பேசுவர்—ஏசுவர்.

உழவன் உள்ளம் குமுறிப் பேசும்போதும் பாட்டாளி பதைத்தெழுந்து நீதி கேட்கும்போதும், தாழ்த்தப்பட்டோன் தலை நிமிர்த்தி ஆண்டவன் படைப்பிலே பேதம் ஏதய்யா என்று கேட்கும்போதும் புரோகிதப் புரட்டு, மதத்தின் பெயரால் புகுத்தப்பட்டுள்ள மடைத்தனம், ஆகியவற்றினைப் பகுத்தறிவாளர் கண்டிக்கும்போதும்—ரஷியா ரஷ்யா!—அந்த நாசபுரியின் நண்பர்கள் இந்த மாபாவிகள், இவர்களைத் தூண்டிவிட்டு, இந்த நாட்டைப் பிடித்தாட்ட பெருந்திட்டம் தீட்டுகின்றனர் ரஷியாவில் பேயாட்சி நடத்திடுவோர்—உடனே அழித்தொழித்திடவேண்டும்—எம்முறையும் மேற்கொள்வோம்—கையில் கிடைத்ததைக் கொண்டு தாக்குவோம்—என்று கொக்கரித்துக் கிளம்புவர், ஒவ்வோர் நாட்டுக் கொடுங்கோலர்களும்!

பட்டினி கொட்டும், பஞ்சம் பரவும், அகவிலை தலைவிரித்தாடும்—நன்மையும் தீமையும் பகல் இரவு போல மாறி மாறி வரத்தான் செய்யும், அவனவன் பாவபுண்யத்துக்குத் தக்கபடி ஓர் புனிதன் படி அளக்கிறான், ஆட்டுக்கும் அளந்துதான் வால் அமைக்கிறான் ஐயன், இட்டார்க்கு இட்ட பலன், அன்று எழுதினான் இன்று நடக்கிறது—என்று பேசிட பூஜாரிக் கூட்டம் எங்கும் கிளம்புகிறது; ஏழையின் வாயை அடைத்துவிடுகிறது.

"ரஷியா என்றோர் நாடு இருக்

கிறதாம்......அங்கு......" என்று ஏழை பேசத் தொடங்கினாலோ,... "அங்கு தேனும் பாலும் ஆறாக ஓடுகிறது, வாரி வாரிப் பருகலாம், பாடுபடாமல் பிழைக்கலாம்,......... பைத்யக்காரா! பைத்யக்காரா! பொய்யுரை கேட்டுப் பூரித்துப் போகிறாயே! அது ஓர் பாபபூமி! பழிபாவத்துக்கு அஞ்சாத பாதகர்கள், எதையும் இல்லை என்று கூறிடும் வஞ்சக நெஞ்சினர், ஏழை மக்களை இம்சித்து வேலை வாங்கி, மிருகங்களைப் பட்டியில் அடைத்துவைத்துத் தீனி போடுவதுபோல, கடுமையாகவேலை வாங்கி, கட்டுக்காவலில் வைத்து விட்டு, ஏதோ தீனிபோட்டு வருகிறார்கள், அங்கு ஞானமும் மோனமும் கிடையாது, கலையும் காவியமும் காணமுடியாது, தேர் திருவிழா இல்லை, தேவனருள் கிடையாது, மகிழ்ச்சி இல்லை, எழுச்சி இல்லை, செக்கு மாடுகள்போல மக்கள் கிடந்துழல்கின்றனர்; இங்கு நீ ஆயிரம் கேள்விகள் கேட்கிறாய், பொறுமையாகப் பதிலளிக்கிறோம், அஞ்ஞானத்தால் உளறுகிறாய், மெய்ஞ்ஞானம் போதிக்கிறோம், சந்தேகப் பேய் பிடித்தாட்டுகிறது அதைப் போக்குகிறோம் — அங்கு இதுபோல் முடியுமா? ஏன் என்று கேட்டு வாய்மூடுமுன், பிணமாவாய்! எதிர்த்து வேலை செய்ய எண்ணினால் போதும் சைபீரியா பாலைவனத்துக்குத் துரத்துவர்—அங்கு உன்னைச் சாகடிக்கத் துப்பாக்கி தேவையில்லை, கடுங்குளிர் போதும்" — என்று கூறி மிரட்டிவிடுவர், ஆட்சியாளர்களும் ஆலய அதிபர்களும்.

நாம் என்ன கண்டோம்! நமக்கென்ன புரிகிறது!—என்ற மனப்போக்குடன் பல ஆண்டுகள் பாமரர் இருந்துவந்தனர் — அந்த நிலை மெள்ள மெள்ள மாறலாயிற்று—சோவியத் நாட்டின் சோபிதம்பற்றிய சொல்லோவியங்களைக் காணவும், ஆய்வுரைகளைக் கண்டு தெளிவுபெறவும் வாய்ப்புகள் கிடைத்தன; சோவியத் நாடும் 'பரீட்சைக்கூடம்' என்ற நிலையிலிருந்து பாசறையாகி, இன்று பாரெங்கும் சமதர்ம அறிவு பரப்பிடும் பல்கலைக் கழகமாகித் திகழ்கிறது. உலகப் பெரும்போரிலே ரஷியா காட்டிய ஆற்றல், அவனிக்கே ஓர் பாடமாக அமைந்தது—பிரிட்டனும் அமெரிக்காவும், பேயாட்சி நடத்தப்படும் பாபபூமி என்று எந்த ரஷியாவைக் கண்டித்துப் பேசினரோ, அந்தப் பேரரசின் பெருந் தலைவனும் ஸ்டாலினுடன் கூடிப் பணியாற்றினர் — உலகில் ரஷியாவுக்கு ஓர் உயர் இடம், உரிய இடம் கிடைத்திடத்தான் போகிறது என்ற உறுதிப்பாடு, ஹிட்லரின் வீழ்ச்சியின் மூலம் ஏற்பட்டுவிட்டது! இனி எத்தர்கள் தம் சித்தம்போல் பேசி மக்களை ஏமாளிகளாக்கிவிட முடியாது என்ற கட்டம் பிறந்துவிட்டது; பல்வேறு நாட்டுப் போர் வீரர்கள், சோவியத்தின் செஞ்சேனை வீரர்களுடன் பழகும்வாய்ப்புக் கிடைத்தது; மிருக நிலை என்றனர் இவர்களோ, மென்மையான இதயம் படைத்தோராக உள்ளனர் — ஏதும் அறியாதவர்கள் என்று ஏளனம் செய்தனர், இவர்களோ எல்லாம் அறிந்து பேசுகின்றனர்; கலை அறியார் என்றனர், இவர்களோ ஆடலிலும் பாடலிலும் அகமகிழ்கிறார்கள்; ஆட்சியாளரின் கொடுமையால் இவர்கள் ஆமைகளாய் ஊமைகளாய் உள்ளனர் என்று கூறினர், இவர்களோ, ஸ்டாலினைத் தமது ரட்சகர் என்று புகழ்ந்து கொண்டாடுகின்றனர், இல்லாமையை ஒழித்துக் கட்டிய ஆட்சி முறையைக் காப்பாற்ற இன்னுயிரைத் தத்தம் செய்வதற்குத் தயாராக இருப்பதாகச் சூளுரைக்கின்றனர்; மாற்றானைத் தாக்கும்போது புலியாகின்றனர், நண்பர்களிடம் பழகும்போது குழந்தைபோலாகின்றனர்! இவர்களா பாப பூமியினர்!! செச்சே! வீண்புரளி! வேண்டுமென்றே கூறப்பட்ட கட்டுக் கதை. நமது கண்களை மறைத்திட, கருத்தைக் குழப்பிட, காதகர்கள் கட்டிய பொய்யுரை! சோவியத் ஆட்சி, நல்லாட்சிதான், ஏனெனில் அங்கு மக்களின் மாட்சிக்கு மதிப்பு இருக்கிறது—என்று களம் சென்ற காளையர் கூறினர்; சோவியத் நாடு பற்றி இருந்து வந்த இருட்திரை பல்வேறு இடங்களில் கிழிந்தது—சமதர்ம ஆட்சியின் ஒளிக்கதிர்கள் மெல்லிய கோடுகளாக, உலகின் பல்வேறு இடங்களிலே தெரியலாயின; மிகச் சிரமப்பட்டு அமெரிக்கா, நங்கந்திரையிட்டுத் தன் மக்களின் பார்வையை மறைத்து வந்தது—இன்றுங்கூடப் பெருமளவுக்கு இந்நிலைதான் அமெரிக்காவில்.

மீண்டும் ஓர் பயங்கரப்போரை மூட்டிவிட்டு வல்லரசுகள் தமது பலத்தை ஒன்று திரட்டி, ஏமாந்த நாடுகளைத் தமது முகாமுக்குள் இழுத்துப் போட்டுக்கொண்டு, எழிலும் ஏற்றமும் பெற்று, எவருடைய மனதையும் வசீகரிக்கத்தக்க முறையை வெற்றிகரமாக நடத்திக் காட்டி வரும் சோவியத் நாட்டின் மீது கடைசித் தாக்குதலை நடத்த வேண்டும் என்ற திட்டமிட்டு, அமெரிக்கப் பேரரசு வள்ளல் வேடமிட்டுக்கொண்டு கிளம்பியது கண்டு, சோவியத் நாடு, இனியும் நாம் வாளாயிருத்தல் தேவையில்லை, வண்ணம்தனைக் காட்டுவோம், வலிவும் பொலிவும் பிறர் காணட்டும், நல்லோர் மகிழவும் நாசகாலர் மிரளவுமான நிலையை நாம் பெற்றிருக்கிறோம், இனி உலகினரே! காண்மின்! உயர்ந்த திட்டம் இது என அறிமின்!— என்று கூறிட நமக்கு இயலும், என்று பெருமிதத்துடன் பேசிடும் கட்டத்தில் நிற்கிறது.

இந்தக் கட்டத்தில் சோவியத் நாடு இருக்கும் நேரத்தில் புல்கானினும், குருஷேவும், இந்தியத் துணைக்கண்டத்திலே சுற்றுப் பயணம் செய்து, இங்கு களிப்புச் சூறுவளியைக்கிளப்பிவிட்டனர் —அது கடல் கடந்து பிரிட்டனையும், அமெரிக்காவையும், மிரட்டிவிட்டது.

பத்து இலட்சம் மக்கள் கூடினர்! பதினாறு மைல் வரையில் மக்கள்! கட்டுக்கடங்காக் கூட்டம்.

மலர், மலைபோல! மக்கள் கூட்டம் கடல்போல!

ஆரவாரம் அலைபோல! ஆனந்தம், பெருவெள்ளம் போல!

கண்கொள்ளாக் காட்சி! சரிதம் காணு வரவேற்பு!

இவைபோல, தயாரிக்கப்பட்ட தலைப்புகள் அல்ல, விளக்கம் வெளியிடுகின்றன, நாட்டிலே உள்ள ஏடுகளெல்லாம்; பட்டிதொட்டிகளிலும் புல்கானின், குருஷேவ்! என்று பேசுகின்றனர்; பார்த்தோர் பிறருக்குக் கூறுகின்றனர், அனைவரும் திருவிழாபோலக் கொண்டாடி மகிழ்கின்றனர்.

இவ்வளவுக்கும், வந்தவர்கள் ஈராண்டுகளுக்கு முன்புவரையில் இந்நாட்டுப் பொதுமக்களுக்கு அறிமுகமாகாதவர்கள்...

ஸ்டாலின் அல்ல, வந்திருப்பது —புல்கானின் — குருஷாவ் — ஸ்டாலின்

வழி நிற்பவர்கள்—அவர் விட்டுச் சென்ற பணியினைத் தொடர்ந்து நடத்துபவர்கள்.

இங்கு டிட்டோ வருவதற்குமுன்பு, அவரைப்பற்றி மக்கள் தெரிந்திருந்த அளவுக்குக்கூட, புல்கானின், குருஷெவ்பற்றித் தெரிந்து கொள்ள வாய்ப்புக் கிடைத்ததில்லை.

எனினும், சோவியத்நாடு, அதன் முறை, நெறி ஆகியவைபற்றி, ஏறக்குறைய ஒரு தலைமுறை கேட்டுக் கேட்டு, மக்கள் மனதிலே ஏற்பட்டிருந்த எழுச்சி இன்று வெள்ளம் போல் கரைபுரண்டோடிற்று—என் வாழ்நாளில் இவ்வளவு பெரிய கூட்டத்தை எங்கும் நான் கண்டதில்லை என்று எப்போதும் மாபெருங் கூட்டங்களைக் காணும் நேரு பண்டிதரே கூறத்தக்க வகையில் கூடிற்று.

சுகர்னோவும் யூநூவும், நாசரும் டிட்டோவும், இங்கு வந்தனர்—அவர்களெல்லாம் அந்தந்த நாட்டு நேருக்களாக இருப்பவர்கள். எனவே, நாட்டு விடுதலைக்காக வீரப்போரிட்ட தலைவர்கள் என்ற முறையில் மக்களும் மக்களின் தலைவர்களும் அவர்களை மகிழ்ச்சியுடன் வரவேற்றனர்.

ஈடனும் டல்லசும் வந்திருந்தனர்—அவர்களை மாளிகைவாசிகளும், அவர்களிடம், மக்களுக்குத் தம்மிடம் உள்ள பாசத்தைக் காட்டி, நண்பர்களாக்கிக்கொண்ட ஆளவந்தார்களும், மதிப்பளித்து வரவேற்றனர்.

நேபாள மன்னர் வந்தார், பிரியமாகத் தலைவர்கள் வரவேற்றனர், கவர்ச்சிமிக்க காட்சியைக் காண்போம், பொழுதுபோக்குக்காக என்ற அளவில் மக்கள் கூடினர்.

இதோ இப்போது சவுதி அரேபிய மன்னர் வந்திருக்கிறார்—உலகில் மிகப் பெரிய பணக்காரரில் அவர் ஒருவராம் — எனவே அவரைப் பயம் கலந்த பாசத்துடன் வரவேற்று, மகிழ்ச்சியூட்டிட ஆட்சியாளர்கள் பெருமுயற்சி எடுத்துக்கொண்டனர்.

புல்கானின் குருஷெவ் வரவேற்பின்போதோ, மக்கள் இதயத்திலிருந்து அன்பு பொழிந்தது, வழிந்தது, காரணம், இவர்கள், ஆற்றலால் தியாகத்தால் நாட்டின் அடிமைத் தளைகளை உடைத்தவர்கள் என்று மட்டுமல்ல, உலகினுக்கே புதுமையாகவும் புதிராகவும் பூத்திட்ட ஓர் புது ஆட்சி முறையை மக்களுக்கு ஓர் புதுவாழ்வு முறையை அமைத்திட, உலகக் கொடுங்கோலர்களை எதிர்த்து வீரமாகப் போரிட்டு வெற்றி பெற்ற பரம்பரையின் இன்றைய வாரிசுகள்.

எனவே இலட்சக்கணக்கிலே மக்கள் ஆர்வத்துடன் திரண்டனர்.

ஏழை என்றும் அடிமை என்றும் மனிதன் இடர்ப்படவும் இழிநிலை அடையவும்தேவையில்லை, அதுநீக்கமுடியாதவிதிஎன்றுவெட்டிப் பேச்சுப்பேசி வீண் பொழுது ஓட்டவேண்டியதில்லை, ஏழையை வாழவைக்க முடியும், இல்லாமையைப் போக்கமுடியும். சீமான்களின் சீற்றத்தையும் மதத் தலைவர்களின் சித்தாந்தத்தையும் எதிர்த்து நிற்கும் அறிவாற்றல் மட்டும்கொண்டு, கஷ்ட நஷ்டம் ஏற்கும் திறம்பெற்று விட்டால், 'புதியதோர் உலகு செய்வோம்' என்ற கவிதா வாக்கை, நடைமுறைத் திட்டமாக்கிக் காட்ட முடியும் என்பதைச் சோர்விலா உழைப்பிற்குப் பிறகு சொல்லொணாத கஷ்ட நஷ்டங்களை ஏற்றுக்கொண்டு வெற்றிபெற்று உலகினுக்குப் புதுப்பாடம் தந்தவர்கள் வருகிறார்கள்; நமக்காக ஓர் நல்லரசு முறை அமைத்திடும் வழி காட்டியவர்கள் வருகிறார்கள்; மாளிகைகளிலேதான் மேதைகள் தோன்ற முடியும், கொலு மண்டபங்களிலே இருந்துதான் வீரர் கிளம்ப முடியும், ஏழை உழைத்திடுவான், ஆனால் உயர்ந்த திட்டம் தீட்டிடும் வகையறியான், பாடுபடுவான், ஆனால் எம்முறையில் பாடுபட்டால் பலன் மிகுதியும் காண முடியும் என்ற பக்குவம் அறியான், கூர்வாள் போன்றான், திறம்பட உபயோகிக்கும் ஆற்றலை ஆண்டவன் சீமான்களிடம் மட்டுமே ஒப்படைத் தருளினர் எனவே அந்தச் சீமான்கள் காட்டும் வழி நடந்தால் தான் ஏழையின் உழைப்புக்கே உயிரூட்டம் ஏற்படும், பெரும் போரிலே மாள ஏழையால் முடியும், ஆனால் பேரரசைக் கட்டியாள அவன் தகுதி பெற்றிடவில்லை, தயாபரன் அந்தத் தகுதியைத் தனவந்தர்களுக்குத் தான் தந்திருக்கிறார், என்று ஜெபமாலையினர், தூபதீப நைவேத்தியத்தின் துணைகொண்டு உபதேசம் செய்தனரே, அது புரட்டரின் பொய்யுரை என்பதைப் புவி அறியச் செய்த புரட்சி வீரர்கள் வருகிறார்கள் — அவர்கள் ஆட்சி நடத்தும் நாட்டினிலே, வளமுள்ள வயல் இருக்கிறது, இங்குபோல— ஆனால், அவை மக்களின் உடைமை.—தொழிற்சாலைகள் உள்ளன—அவ்வளவும் உடைமையாகக் கொண்ட டாட்டாக்கள் இல்லை— உல்லாசக்கூடங்களிலே, மானே! மயிலோ! அன்னமோ! அழகு நிலவோ! என்று வியக்கத்தக்க விதத்தில் ஆடிடும் அணங்குகள் உளர். ஆனால், அவர்கள் சீமான்களின் சிற்றின்பக் கருவிகளாக இல்லை, நாட்டுக் கலைக் கருவூலக் காவலர்களாக உள்ளனர் — மக்களின் நன்மதிப்புப் பெற்று வாழ்கின்றனர் — என்ற உண்மையை அறியும்போது, இங்குமட்டுமல்ல, எந்த நாட்டிலும் உள்ள மக்களின் மனதிலே ஆர்வம் அன்பாகிப் பொங்கி வழியத்தான் செய்யும். 'அதைத்தான், சென்னையும் கோவையும், பம்பாயும் டில்லியும் கல்கத்தாவும் போட்டியிட்டுக் கொண்டு காட்டின. பொற்காலம் பிறந்தது, பொல்லாங்கு மடிந்தது, புரட்டர் ஒழிந்தனர், புல்லர்கள் சாய்ந்தனர்; மக்களுக்கே உடைமை, மக்களுக்கே அரசு என்ற புதுத் திட்டத்தை நிலைநாட்டினர். இஃதோர் வானவில், காற்றினிலே மிதந்துவரும் கீதம், சின்னாட்களிலே மறையும், மடியும்—நாட்டு வளம் குன்றும், ஆட்சி ஆட்டம் கொடுக்கும், வாணிபம் நலியும், தொழில் துவளும், கல்வி கெடும், கலை மடியும், செய்வதெதுவெனத் தெரியாது, புயலில் சிக்கிய சிறார்போலாவர் தலைவர்கள், என்று கூறினர், சென்றது இனி மீளாது என்பதை ஏற்க மறுத்திடும் உள்ளம் படைத்த உலுத்தர்கள். முப்பதாண்டுகளுக்குமேல் உருண்டோடிவிட்டன—முதலாளித்துவ நாடுகள் என்னென்ன வளம் காட்டமுடியுமென்று கூறினவோ, அவை யாவும், மும்மடங்கு பெருகிய நிலையில் பொதுஉடைமை நாடு காட்டுகிறது. களிப்பும் கலையும், தொழிலும் தோழமையும் கைகோர்த்துக் கொண்டு நடமிடுகின்றன. வீரமா? உலகு வியக்கத்தக்க அளவில். தியாக உள்ளமா? கேட்போர் எழுச்சிபெறத்தக்க வகையில்! இந்த நிலை வந்தது, வாரீர்! காணீர்! கேளீர்!—என்று நம்பிக்கையும் உற்சாகமும் கலந்த குரலில், புல்கானினாலும் குருஷேவாலும், மக்களிடம் பேசமுடிகிறது.

இரும்புத் திரையிட்டுள்ளனர் என்று பிறநாட்டார், குறிப்பாக வல்லரசுகள் பேசிய காலையில், கொல்லன் உலைக்கூடத்து வெப்பம்போல, ரஷியாவின் புதுமுறை உருவாகிக்கொண்டிருந்தது என்று கூறலாம். இன்று வடித்தெடுத்த வாளைக் காண வாரீர், என்று புல்கானின் அழைக்கிறார்—வந்திடின் காண இன்னின்ன காட்சிகள் உள்ளன என்று குருஷெவ் பட்டியல் தருகிறார். எவரும் வரலாம், எம்மை மதிப்போரும் வரலாம், எமது முறையினைக் குறித்து மட்டமான கருத்துக் கொண்டோரும் வரலாம், என்று அழைக்கிறார்கள் ரஷியத் தலைவர்கள்.

நமது நாட்டு விவசாய மந்திரி பக்தவத்சலத்தைக் கூட அழைத்தார்களாம்.

பிறநாடுகளிலிருந்து இதுவரை வந்திருந்த தலைவர்கள் யாருக்கும் தரப்படாத வகையில் மக்கள், இவர்கட்கு வரவேற்பு அளித்தனர் என்பது மட்டுமல்ல, பிற எந்தத் தலைவரும், மக்களிடம் காட்டாத வகையில் அன்பையும் அக்கறையையும் இவர்கள் காட்டினர்.

இன்னிசை கேட்டு
இன்புறுதல்
நாட்டியம் கண்டு
மகிழ்தல்
குல்லாய் அணிந்து
குதூகலப்படுவது
குங்குமப் பொட்டு
வைத்துக்கொண்டு
கும்பிடுவது
இளநீர் பருகுவது
நமஸ்தே கூறுவது!

இவைகளெல்லாம், பொதுவான முறைகள்—இங்கு வரவேற்கப்படும் யாருக்கும் ஏற்பாடாகும் உபசார முறையாகும்.

ஆனால் மக்களின் முகத்திலே ஓர் மலர்ச்சி, திருவிழாக் கோலம், தோழமை உணர்ச்சி—இவைகளை யார் திட்ட முடியும், ஊட்ட முடியும்!

அதுபோன்றே, மக்களின் சார்பிலேயே, எந்தக் காட்சியானாலும், சம்பவமானாலும், பொருளானாலும், பேச்சானாலும், ரஷியத் தலைவர்கள் கண்டனர், பேசினர், இங்கு வந்தது மக்களைக்காணவும் மக்களிடம் பழகவும் மக்களின் பிரச்னைகளைப் பற்றிப் பேசவும், அறியவும்—என்ற நோக்குடனேயே அந்தத் தலைவர்களின் போக்கு இருந்து வந்தது.

குதுப்மினாரையும், தாஜ்மஹாலையும் ஜும்மாமசூதியையும் அமெரிக்க நாட்டுத் தலைவர்களோ பிரிட்டிஷ் பிரபுக்களோ கண்டால், உடனே, எத்தனை கோடி பவுன்கள் செலவாகியிருக்கும்—இவ்வளவு செலவிடத்தக்க நிலையில் பொன் பூத்திடும்பூமியாக இருக்கிறது இந்நாடு ......இது நமது ஆதிக்கத்துக்கு உட்பட்டால்........என்று ஆசை ஊறும் நெஞ்சுடன் நிற்பர்!

பேசும்போதோ, இந்தியாவின் பண்டைப் பெருமையை, கலைத்திறனை, அழகினை நுகரும் அருந்திறனைப் பாராட்டுவர்.

புல்கானின், குருஷேவ் கண்டனர்—அழகொளியுடன் விளங்கிடும் அந்த அற்புதமான கட்டிடங்களை. கண்டதும், அவர்கள் மனக்கண் முன்பு என்ன காட்சிகள் தெரிந்தன? இவைகளைக் கட்டுவதற்காக எத்தனை எத்தனை ஏழைகள், அடிமைகள், வேலை வாங்கப்பட்டிருக்கவேண்டும், மக்களின்பொருள் மன்னனிடம் எவ்வளவு மிகுதியாகக் குவிந்திருந்தால், இத்தகைய மணிமாடங்களும் கூடங்களும் கட்டித் தமது கீர்த்தியை நிலைநாட்டிட வாய்ப்பு ஏற்பட்டிருக்கும்—என்ற எண்ணங்களைக் கிளறத்தக்க காட்சிகளே தோன்றின.

பாரிஸ் பட்டினத்துக்காரனின் மனக்கண்ணில் இந்தக் காட்சியா தெரிந்திருக்கும்? ஆஹா! இவ்வளவு 'ரசிகத்தன்மை' கொண்ட பாதுஷாவின் அந்தப்புரத்தில் எத்தனை எத்தனை துடியிடை, காமக்களியாட்டத்தில் ஈடுபட்டுத் துவண்டதோ, சிரிப்பையும் சிருங்கார ரசத்தையும் சிந்திய சிட்டுகள் எத்தனையோ! சேல்விழியாள் பாதம் வருடிய பாதுஷாவின் கரம் செம்பஞ்சுக் குழம்பினைப் பூசியதால் பெருமைப்பட்டதோ அல்லது ஆலம் ஏற்ற விழிச்சியரின் அதரம் கொண்டிருந்த சிவப்பினை அவர் தம் கண்கள் கொண்டிட, அஃதறிந்து ஆவன செய்ததால், பிறகு அப்பப்பா! இனி ஆகாது! இது அடுக்காது! என்று எப்படி ஏப்

(2-ம் பக்கம் பார்க்க)

இரண்டு புளுகர்கள்!

—★—

ஒரு சைவனும் வைணவனும் வெகு காலத்திற்குப் பிறகு ஒரு நாள் சந்தித்தனர். இருவரும் மிகவும் நெருங்கிய நண்பர்கள். அதாவது ஒருவன் அண்டப் புளுகன்; மற்றொருவன் ஆகாசப் புளுகன்.

"நாராயண! என்ன சிவத்தை வெகு நாட்களாகக் காணவில்லை?"

"அரியின் தரிசனமும்தான் கிட்டவில்லை"

"அரிதுவாரகைக்குச் சென்றிருந்தது...இப்போதுதான் இங்கே பிரவேசம்" என்றது, அரி.

"துவாரகையில் என்ன விசேஷமோ?" என்றது, சிவம்.

"விசேஷமென்ன, பகவான் கிருஷ்ண பரமாத்மாவைப் பார்த்தேன். அவருடைய பிருந்தாவனத்தில் எனக்கு ஒரு அதிசயத்தைக் காண்பித்தார். அடடா! அதை என்ன சொல்லுவேன், போங்கள்"

"அப்படி என்ன சுவாமிகளே, அதிசயம்?"

"ஒரு கத்திரிக்காய்ச் செடியில் ஒரு கத்தரிக்காய் எவ்வளவு பெரிசாக வளர்ந்திருக்கிறது தெரியுமா? இரண்டுமைல் உயரம்; ஒன்றரை மைல் சுற்றளவு...ரொம்பப் பெரிசு ......ரொம்பப் பெரிசு!......" என்று பெருமையாகச் சொல்லிற்று அரி.

"ஓ, அப்படியா...நானும் கூடக் கைலாசத்துக்குச் சென்றிருந்தேன்..." என்றது சிவம்.

"உம்...அங்கே என்ன பிரமாதமாக இருக்கப்போகிறது?"

"போமய்யா! அடேயப்பா, பார்வதி பனிக்கட்டியைப் பிசைந்து கொடுக்க சிவபெருமான் சட்டி ஒன்று செய்கிறார். எவ்வளவுபெரிசு தெரியுமா? நான்கு மைல் விஸ்தீரணம்...இரண்டுமைல் ஆழம்...... எனக்கு அதைச் சுற்றிப் பார்க்க இரண்டு நாள் பிடித்தது..." என்று கூறி, திமிரோடு பார்த்தது, சிவம்.

அரிக்குக் கொஞ்சம் யோசனை. பிறகு, "ஏனய்யா, அவ்வளவு பெரிய சட்டி எதற்கு?" என்றது, வைணவம்.

"நீர் சொன்னீரே, கத்தரிக்காய்! அதைச் சமைக்கத்தான்!" என்றது சைவம்.

காஞ்சிபுரம், 95, திருக்கச்சிநம்பி தெரு "திராவிட நாடு" அச்சகத்தில்
ஆசிரியர் சி. என். அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.